பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 11 செவ்வாய்க்கிழமை 24.04.2018 | கதிர் 169

நாடு திரும்பினார் முதல்வர் விக்கி

யாழ்ப்பாணம், ஏப்.24

கடந்த இருவார காலமாக இந்தியப் பயணத்தை மேற்கொண்டிருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுக் கொழும்பு திரும்பினார்.

ஆன்மீகப் பயணம், மருத்துவத் தேவை ஆகிய காரணங்களுக்காக

பக்கம் 14

பல்கலை வளாகத்தினுள் பலாத்காரமாகப் புத்தர்!

நிர்வாகம் தடுத்ததால் வவுனியாவில் பதற்றம்

காலவரையறையின்றி மூடப்பட்டது வளாகம்

வவுனியா, ஏப்ரல் 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்துக்குள் நேற்றுப் புத்தர் சிலை ஒன்றை வைப்பதற்குச் சிங்கள மாணவர்கள் முயன்றனர். இதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாகத் தடுத்தது.

பக்கம் 14

சிவன் ஆலயத்தை இடித்து பௌத்த விகாரை அமைப்பு

ஒட்டுசுட்டான்வாசி குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஏப்.24

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் ஒரு ஏக்கர் தனியார் காணியில் இருந்த மிகவும் பழமை வாய்ந்த சிவன் ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கிய இராணுவத்தினர், அந்த இடத்தில் பௌத்த விகாரை ஒன்றை அமைத்து வருகின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பக்கம் 14

புலிகளின் பதுங்கு குழி பனையில் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி, ஏப்.24

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் அரசர்கேணிப் பகுதியில் விடுதலைப்புலி

பக்கம் 03

நாடாளுமன்ற அமர்வு மே 8 பிற்பகல் 2.15க்கு

தவறைத் திருத்தினார் மைத்திரி

கொழும்பு, ஏப்.24

நாடாளுமன்ற அமர்வை எதிர்வரும் மே 8ஆம் திகதி பிற்பகல் 2.15 மணிக்குக் கூட்டுவதற்கான திருத்திய வர்த்தமானி அறிவிப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை கையொப்பமிட்டார்.

முன்னர் வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பில் நாடாளுமன்றம் கூடும் திகதி குறிப்பிடப்பட்டபோதும்

பக்கம் 14

யாழ்.மாநகரின் கழிவகற்றல் தனியாரிடம் வழங்கப்படா

முதல்வர் ஆர்னோல்ட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.24

யாழ்ப்பாணம் மாநகரின் திண்மக் கழிவகற்றல் பணிகள் தென்னிலங்கைத் தனியார் நிறுவனத்திடம் வழங்கப்படவுள்ளதாக வெளியான செய்திகள் உண்மைக்

பக்கம் 14

சீனாவின் பிடிக்குள்ளே சிக்கியுள்ளது இலங்கை

விஜேதாச சாடல்

கொழும்பு, ஏப்.24

இலங்கையைச் சீனாவே வழிநடத்துகின்றதென நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

சீனா தனது அதிகாரத்தை எல்லைமீறிப் பிரயோகிப்பதா

பக்கம் 14

மாணவன் மீது தாக்குதல்!

வவுனியா, ஏப்.24

வவுனியாவில் பாடசாலை மாணவன் ஒருவன் மீது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதி , நடத்துநர் மற்றுமொரு நபர் ஆகியோர் இணைந்து தாக்குதல் நடத்தி உள்ளனர்.

வவுனியா பூவரசன்குளம் ஊடாகச் சேவை

பக்கம் 14

காணிகளை விடுவிக்குமாறு கோரி இரணைதீவில் இறங்கினர் மக்கள்

பல்கலை மாணவர்களும் பங்கேற்பு

(எஸ்.நிதர்ஷன்)

கிளிநொச்சி, ஏப்.24

இரணைதீவு பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி இரணைதீவுக் கரைக்குச் சென்ற மக்கள் அங்கு கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு தெரிவித்துப் பங்கேற்றனர்.

கிளிநொச்சி, பூநகரிப்

பக்கம் 03

இனிது ரகசியம் அல்ல!

விடயங்களைப் புட்டுப் புட்டு வைத்து சர்ச்சையைக் கிளப்பு வதுதானே இப்பத்தியின் நோக்கம்?

அரச நிர்வாகத்தை முடக்கும் போராட்ட முஸ்தீபு குறித்து கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அறிவித்திருக்கின்றமையை ஒட்டி ஒரு புதிய சர்ச்சையை ஆரம்பித்து வைக்கலாம் என்று நம்பு

பக்கம் 03

3 வீடுகளுக்குள் புகுந்து ரவுடிக் கும்பல் தென்மராட்சியில் பெரும் அட்டூழியம்!

இரவு முதல் அதிகாலை வரை அடாவடி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.24

தென்மராட்சி மட்டுவில் மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரை கிராம சேவகரின் வீடு உட்பட மூன்று வீடுகளுக்குள் நுழைந்த ரவுடிக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டுள்ளது. இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலை

பக்கம் 14

கட்டுப்பாடிழந்தது மோ.சைக்கிள் கட்டப்பிராய் இளைஞர் மரணம்!

நாவற்குழியில் நேற்றுச் சம்பவம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.24

அதிவேகத்துடன் வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து மின் கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மற்றொரு இளைஞர் கவலைக்கிடமான நிலையில் யாழ்.

பக்கம் 03

உயர்மட்டப் பேச்சு நடத்த வாய்ப்பு கிடைக்காமல் நேற்று நாடு திரும்பினார் ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, ஏப். 24

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கிய நாடுகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் எந்த அதிகாரபூர்வப் பேச்சுக்களையும் நடத்தாமலேயே நாடு திரும்பியுள்ளார்.

கொமன்வெல்த் உச்சி மாநாடு கடந்தவாரம் லண்டனில் நடைபெற்றது. இதில் பங்கேற்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளி விவகார அமைச்சர் திலக் மாரப்பன உள்ளிட்ட குழுவினர் லண்டன் சென்றிருந்தனர்.

கடந்த 15 ஆம் திகதி லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்ற ஜனாதிபதி ஒருவார

காலம் அங்கு தங்கியிருந்து பல்வேறு மாநாடுகள், கருத்தரங்குகள், மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்றார்.

இந்த விஜயத்தின்போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரித்தானியப் பிரதமர் தெரேசா மே உள்ளிட்ட பல் வேறு நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து இருதரப்பு பேச்சுக்களை நடத்துவதற்கும் எதிர்பார்த்திருந்தார்.

எனினும், ஜனாதிபதி மைத்திரியின் விஜயத்தின் போது, எந்த வெளிநாட்டுத் தலைவரையும் சந்தித்து இரு தரப்பு பேச்சுகளை நடத்தும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

கொமன்வெல்த் உச்சி மாநாட்டுக்கான அதிகாரபூர்வ வரவேற்பின் போது, பிரித்தானியப் பிரதமர் தெரேசா மே மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்களுடன் சம்பிரதாயமாக கைகுலுக்கிக் கொண்ட போதும், எந்த தலைவர்களுடனும் பேச்சுக்களை நடத்தவில்லை.

கொமன்வெல்த் மாநாட்டில் ஜனாதிபதிக்கு அருகே தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா அமர்ந்திருந்தார். அவருடனும் மைத்திரிபால சிறிசேன பேச்சுக்களை நடத்தவில்லை.

எனினும், கொமன்வெல்த் வர்த்தக மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருந்த முன்னாள் வெளி விவகார அமைச்சரும் இலங்கையின் நிதியமைச் சருமான மங்கள சமரவீர, கடந்தவாரம், தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா மற்றும் ருவாண்டா அதிபர் போல் கஹாமி உள்ளிட்டோருடன் பேச்சுகளை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது கலைகளைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் உழைப்போம்

வேலணை பிரதேச சபை தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி

யாழ்ப்பாணம், ஏப். 24

யுத்தம் எமது பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்த காலத்திலும் எமது இனத்தின் கலை கலாசாரங்கள் அழிவுறாது பேணிப் பாதுகாத்தவர்கள் நாம்.

அந்த வகையில் இன்றுள்ள அமைதிச் சூழலில் எமது இனத்தின் வரலாற்று அடையாளங்களையும் கலாசாரங்களையும் மேலும் உறுதிமிக்கதாக வளர்த்துச் செல்ல நாம் அயராது உழைக்கத் தயாராக இருக்கின்றோம் என வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் குறித்த பிரதேச நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 43 ஆக குறைக்க அறிவுறுத்தல்!

கொழும்பு, ஏப். 24

புதிதாக நியமிக்கப்படும் அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையை 43 ஆக குறைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியிடம் கூறியுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புதிய அமைச்சரவையில் 49 அமைச்சர்களை நியமிக்கத் திட்டமிடப்பட்டிருந்த நிலையிலேயே,

ஜனாதிபதி இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

எனினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில், அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பாக இன்னமும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

அதேவேளை, பெரும்பாலான அமைச்சர்கள் தற்போதுள்ள அமைச்சரவையில் கொண்டிருக்கும் பதவிகளையே தக்கவைத்துக் கொள்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீது விவாதமோ, வாக்கெடுப்போ நடத்தப்படா!

கொழும்பு, ஏப். 24

எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு ஆரம்பிக்கப்படும் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொள்கை விளக்க உரையை நிகழ்த்துவார் என்றும் எனினும் அந்த உரை மீது விவாதமோ, வாக்கெடுப்போ நடத்தப்படமாட்டா என்றும் கூறப்படுகிறது.

கடந்த 12 ஆம் திகதி நள்ளிரவில் இருந்து ஜனாதிபதி நாடாளுமன்றத்தை முடக்கியுள்ளார். மே 8 ஆம் திகதி நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படும் போது, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கொள்கை விளக்க உரையை தோற்கடிப்பதன் மூலம், நாடாளுமன்றத்தை கலைக்கச் செய்யும் திட்டம் ஒன்றை கூட்டு எதிரணியினர் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், ஜனாதிபதி மைத்திரியின் உரை சிம்மாசன உரை அல்ல என்றும் அது கொள்கை விளக்கவுரை மாத்திரமே என்றும் கூறப்படுகிறது.

இதனால், இந்த உரையின் மீது விவாதம் நடத்தப்படவோ,

வாக்கெடுப்பு நடத்தப்படவோ சாத்தியமில்லை என்றும் அரசியல் பிரமுகர்கள், சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

1978 ஆம் ஆண்டின் அரசமைப்பில், நாடாளுமன்றம் ஜனாதிபதியால் முடக்கப்பட்டு மீண்டும் கூட்டப்படும்போது, அரசின் கொள்கையை விளக்கி உரையாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த உரை மீது விவாதம் நடத்தவோ, வாக்கெடுப்பு நடத்தவோ, அரசமைப்பில் இடமளிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி சிம்மாசன உரை நிகழ்த்தும் திட்டம் இல்லை என்றும், அரசின் கொள்கைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய கொள்கைப் பிரகடனத்தையே அவர் வெளியிடுவார் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இத்தகைய விவாதமும் அல்லது வாக்கெடுப்புக்கும் அரசு தயாராகவே இருக்கிறது அச்சம் கொள்ளவில்லை என்று ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

கடும் வெப்பம் காரணமாக சிறுவர்களுக்குப் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 24

தற்பொழுது நிலவும் வெப்பத்துடன் கூடிய காலநிலை காரணமாகத் திறந்த வெளியில் மேற்கொள்ளப்படும் பணிகளைக் கூடிய வரையில் தவிர்த்துக்கொள்ளுமாறு வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கடும் வெப்பத்தின் காரணமாக சிறுவர்கள் பாதிக்கக்கூடிய நிலை இருக்கின்றது என விளையாட்டுத்துறை வைத்திய அதிகாரிகலால் ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.



வவுனியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 16 இராணுவ வீரர்கள் மயக்கமுற்று நேற்றுமுன் தினம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதற்கு அதிக வெப்பமே காரணமாக இருக்கும் என்று வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டினார்.

அதிக வெப்பத்தின் காரணமாக இவ்வாறான அனர்த்தங்களை தவிர்த்துக்கொள்ள வேண்டுமாயின் பகல் வேளைகளில் ஆகக்கூடுதலாக நீரைப் பருக வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பயன்படுத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலக்கீழ் பதுங்கு குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தனியார் ஒருவரின் காணியில் இந்தப் பதுங்குகுழி அடையாளம் காணப்பட்டு அருகில் உள்ள இராணுவ முகாமுக்கு அறிவிக்கப்பட்டது.

அங்கு சென்ற இராணுவத்தினர் அந்த நிலக் கீழ் பதுங்கு குழிவிடுதலைப்புலிகளுடையது எனத் தெரிவித்தமையோடு அதனைச் சோதனை செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுப்பட்டனர்.

இது சுமார் 35 அல்லது 45 அடி ஆழமானதாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றேன்.

எது, எப்படியென்றாலும், நாரதர் கலகம் நன்மையில் தானே முடியும்? இந்த சர்ச்சையும் இறுதியில் நன்மையில் முடியும் என்று நம்புவோமாக !

அரச நிர்வாகத்தை அஹிம்சைவழியில் – அறநெறியில் – முடக்குவது என்பது தமிழருக்குப் புதியதல்ல. அது குறித்து எமது நாளிதழின் இன்றைய ஆசிரிய தலையங்கம் விரிவாக ஆராய்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் 1961 பெப்ரவரி 20 ஆம் திகதி முதல் ஒரே சமயத்தில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு கச்சேரிகளுக்கு (செயலகங்களுக்கு) முன்னால் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வழிமறித்து அரச நிர்வாகத்தை மூன்று மாதங்கள் வரை முடக்கினர்.

அதன் பின்னர் ஒரு நாள் இரவு 9 மணிக்கு ஒரே சமயத்தில் ஐந்து கச்சேரிகளுக்கும் முன்னால் நவீன ஆயுதங்களுடன் பல்லாயிரம் இலங்கை இராணுவத்தினர் ஒன்று திரண்டு, சத்தியாக்கிரகிகளை அடித்துத் துவம்சம்செய்து, அடாவடித்தனம் பண்ணி, ஆயுத முனையில் அந்தப் போராட்டத்தை முடக்கினர்.

அந்த வேளையில் நூற்றுக் கணக்கான தமிழ் அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். பல மாதங்கள் அவர்கள் தடுப்புக் காவலில் வாடவேண்டியவர்களானார்கள்.

அது போன்ற அரச நிர்வாக முடக்கப் போராட்டம் குறித்து சுமந்திரன் இப்போது குறிப்பிடுகின்றமையால், தமிழ் மக்களின் மாபெரும் வெகுசனப் பொங்குணர்வாக – அறவழிப் பட்ட தமிழ்த் தேசியப் பேரெழுச்சியாக – மூன்று மாதங்கள் நீடித்த அந்தப் பழைய மறியல் போர் குறித்து எண்ணுவது பொருத்தமாகின்றது.

அந்தப் போராட்டம் உண்மையில் தமிழரசுக் கட்சியின் உச்ச எழுச்சிக் காலம் எனலாம். அதனை 1961 இல் வழிநடத்திய தலைவர்களின் யார் இன்று தமிழரசுக் கட்சியில் தலைவர்களாக எஞ்சியிருக்கின்றனர் என்று சிந்தித்துப் பார்த்தேன்.

அந்தப் போராட்டத்தில் மாணவனாகச் சிறை சென்ற சட்டத்தரணி நவரத்தினம் (கரிகாலன்) இப்போது வயது முதிர்ந்து, தளர்ந்தவராகக் கனடாவில் வசிக்கின்றார். எஞ்சிய தலைவர்கள் பலர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டனர்.

இன்று உயிரோடிருக்கும் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், 1977 பொதுத் தேர்தல் சமயத்தில்தான் முழு நேர அரசியலுக்கு வந்தார் என்பதை நான் அறிவேன். அதற்கு முன்னர் பலதடவைகள் நேரில் சென்றும், தொலைபேசி மூலமும் தந்தை செல்வாவே தமிழரசுக் கட்சிக்கு வருமாறு அழைப்பு விடுத்தும் சம்பந்தன் அப்போதெல்லாம் அந்த அழைப்பை ஏற்காமல் திருகோணமலையில், சிங்களத் திலும், தாராளமாக வழக்குகளை நடத்தி, வாதம் புரிந்து, சம்பாதித்துக் கொண்டிருந்தார் என்பதையும் அறிந்திருந்தேன்.

இந்தப் பின்புலத்தில் 1961 சத்தியாக்கிரகப் போராட்டத்தில் சிறை சென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களுள் யார் இன்றும் கட்சியில் இருக்கின்றனர் என்ற தேடுதலைத் தொடர்ந்து போதுதான் அந்த ஆவணம் எனது கைகளுக்குக் கிட்டியது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் இந்த சமயத்தில் தம்மோடு சிறை புகுந்த சக அரசியல் கைதிகளின் 'ஒட்டோ கிராப்' ஒன்றை பேணியிருந்தார். அந்த 'ஒட்டோ கிராப்' தான் என் கைக்குச் சிக்கியது.

என்ன விநோதம்! அதில் சம்பந்தரின் கையெழுத்துடன் ஒரு பக்கத்தில் இருந்தது.

'இ.சம்பந்தர்' என்று தமிழிலும் *'R.Sampanthan'* என்று ஆங்கிலத்திலும் எழுதியிருந்தார் சம்பந்தன். *'125 கச்சேரி வீதி, திருகோணமலை'* என்று தமது விலாசத்தைக் குறிப்பிட்டு *'தடுப்பு முகாம், கொழும்பு, 06-05-1961'* என்று தமது அப்போதைய இருப்பிடத்தையும் ஆங்கிலத்தில் அவர் தமது கையெழுத்தில் எழுதியிருக்கிறார்.

ஆக, அந்தப் போராட்டத்தில் சிக்கிச் சிறை சென்றவர்களுள் சம்பந்தரும் ஒருவர் என்பது திட்டவட்டமாக உறுதியாயிற்று. ஆனால் அந்தப் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட அரசியல் தலைவராக அவர் நோக்கப்படுவதில்லையே என்ற எண்ணம் என் மனதில் இடறியது.

அன்று அவரோடும் தந்தை செல்வா, அமிர்தலிங்கம், இராஜதுரை போன்ற தலைவர்களோடும் சிறைசென்று ஆறு மாதங்களுக்கு மேல் காவலில் வாடி, இப்போது அரசியலில் ஒதுங்கியிருக்கும் ஒரு பிரமுகரைத் தேடிப் பிடித்து விவரம் கேட்டேன்.

அந்த விடயத்தை எழுத வேண்டாமே என்றார் அவர். பெரிய பிகு பண்ணினார். பிறகு மெல்ல உண்மையை அவிழ்த்து விட்டார்.

"ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டவர்களுள் சம்பந்தரும் ஒருவர்தான். 28 வயது இளம் சட்டத்தரணியாக வீறோடுதான் அவரும் தடுப்புக் காவலுக்கு வந்தார். ஆனால் அரசின் சீற்றமும், அரசியல் போக்கும் நான்கு, ஐந்து நாள்களில் அவரதும் அவர் போன்ற சட்டத்தரணிகள் நான்கு. ஐந்து பேரினதும் மனவுறுதியைத் தகர்த்து விட்டன.

" நாங்கள் கட்சிக்காரர்கள் அல்லர், சுயாதீன நபர்கள் என அவரும் திருகோணமலை சட்டத்தரணிகளான மு.கோ. செல்வராஜா, இரங்கநாதன், சந்திரபாலன் போன்றோரும் எழுதிக் கொடுத்து விட்டு, அதனடிப்படையில் விடுதலை பெற்று, வீடு திரும்பி விட்டனர். தந்தை செல்வா நோய்வாய்ப்பட்டு நிலைமை மோசமடைந்த சூழலில் – சுமார் ஆறு மாத காலத்தின் பின்னர் – நாங்கள் எல்லோரும் குற்றச்சாட்டு, வழக்கு ஏதுமின்றி விடுதலையானோம்" – என்றார் அந்தப் பிரமுகர்.

அவர் வழங்கிய தகவலை வைத்துக்கொண்டு என் தேடலை விரிவுபடுத்தியபோதுதான் விடயம் விளங்கியது.

அந்தப் போராட்டத்தை ஆரம்பித்தது என்னவோ தமிழரசுக் கட்சிதான். ஆனால் அதன் வீறு கண்டு தமிழரசு அல்லாதோரும் அதில் இணைந்து கொண்டனர்.

அப்போது தமிழ் காங்கிரஸைச் சேர்ந்த உடுப்பிட்டி எம்.பியான எம்.சிவசிதம்பரம், வவுனியா எம்.பியான ரி.சிவசிதம்பரம் மற்றும் கந்தையா வைத்தியநாதன், ஓய்வுபெற்ற சொலிஸிட்டர் ஜெனரலாக இருந்த திருச் செல்வம் கியூ.ஸி.(பின்னாளில் தமிழரசு சார்பில் அமைச்சரானவர்), மட்டக்களப்பு மேயராக இருந்த எதிர்மன்னசிங்கம், மட்டக்களப்பின் இரண்டாவது எம்.பியாக இருந்த சு.கவின் இராஜன் செல்வநாயகம், எப்போதுமே தமிழரசுக் கட்சியுடன் முரண்பட்டு நின்ற அல்பிரட் ரி.துரையப்பா (பின்னாளில் யாழ்மேயர்) எனப் பிறகட்சிகளில் இருந்தபடி அல்லது எந்தக் கட்சியும் சாராமல் இந்த எழுச்சிப் போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழ்ப் பிரமுகர்களின் பட்டியல் நீண்டது. வேறு கட்சிகளைச் சார்ந்த – அல்லது கட்சி எதையும் சாராத – பல நூற்றுக் கணக்கான தமிழ்ச்சட்டத்தரணிகளும் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றினர்

அந்த வகையில் கட்சி சாராமல் தனித்துவமாகப் போராட்டத்தில் பங்குபற்றி, சிறை சென்ற பின்னர், தாம் கட்சி சார்ந்தவர் அல்லர் என்ற விடயத்தைக் கூறி, அதனடிப்படையில் ஒரு சில நாள்களில் விடுவிக்கப்பட்டவர் தான் இன்றைய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

1961 இல் தமிழரசு முன்னெடுத்த தமிழ் தேசிய எழுச்சி நடவடிக்கையான அரச நிர்வாக முடக்கப்போராட்டத்தில் கைதாகிச் சிறை சென்ற தியாகி என்ற நாமத்தை சம்பந்தன் தரிக்கலாமா? இல்லையா? – வாசகர்களின் முடிவுக்கே அதனை விட்டு விடுகிறேன்.

- மின்னல்-

வெசாக் தினத்திலாவது சுதாகரை விடுவியுங்கள்

கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம்

கிளிநொச்சி, ஏப்.24

சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஆனந்த சுதாகரனை வெசாக் தினத்திலாவது விடுதலை செய்வதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கரைச்சிப் பிரதேச சபையின் கன்னி அமர்வில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குத் தெரிவாகிய உறுப்பினர்களின் கன்னி அமர்வு நேற்று கரைச்சிப் பிரதேசமண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த அமர்வின்போதே ஆயுள் தண்டனை கைதியாகச் சிறையில் உள்ள அரசியல் கைதி ஆனந்தசுதாகர் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தாயின் அரவணைப்பை இழந்த இந்தக் குழந்தைகளுக்குத் தந்தையின் அரவணைப்பு கிடைக்கும் வகையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஆனந்த சுதாகரை விடுதலை செய்ய வேண்டுமெனப் பிரதேசசபை உறுப்பினர்களான ஐயம்பிள்ளை அசோக்குமார், விக்ரர் சாந்தி ஆகியோர் பிரேரணை கொண்டு வந்தனர்.

அத்துடன், கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்கான பொதுநூலகக் காணி விடுவிக்கப்பட்டு நவீன வசதிகள் கொண்ட பொதுநூலகம் அமைக்கப்படவேண்டும், ஏற்கனவே ஒருங்கிணைப்புக்குழுவின் தீர்மானங்களுக்கு அமைவாக கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் வருகின்ற மாவீரர் துயிலும் இல்லங்களை பிரதேசசபை பொறுப்பேற்று நிர்வகிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும், அது நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் பிரதேச சபையின் ஊடாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மொழி முதல் மொழியாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படவேண்டும் மற்றும் கரைச்சிப்பிரதேச சபையின் உப அலுவலமாகக் காணப்படுகின்ற கண்டாவளை, தனிப்பிரதேச சபையாக உருவாக்கப்பட வேண்டும் எனவும் கன்னி அமர்வில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஐ)

கட்டுப்பாடிழந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்.தென்மராட்சி ஏ– 35 வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்துக்கு அருகாமையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் – மன்னார் வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் இருவர் பயணித்துள்ளனர். மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையால் மின்கம்பத்துடன்மோதியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கட்டப்பிராயைச் சேர்ந்த 23 வயதுடைய விஜயரத்தினம் பிரசாத் என்ற இளைஞர் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த 27 வயதுடைய குணராசன் திருக்குமரன் என்ற இளைஞர் கவலைக்கிடமான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ–7)

காணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட இரணைதீவு மக்கள் தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த ஓராண்டாகத் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

போராட்டத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு கண்டனப் பேரணி ஒன்று நேற்றுக் காலை அவர்கள் தற்போது வசித்து வரும் இரணைமாதா நகரில் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுமார் 50 மீன்பிடிப் படகுகளில் மக்கள் இரணைதீவை நோக்கிப் பயணித்தனர்.

கிறிஸ்தவ மத குருமார்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அந்தப் பகுதி மக்கள் இரணைதீவுக் கரையில் ஒன்றுகூடிக் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரணைதீவுப் பகுதியில் முதற் கட்டமாக 186 ஏக்கர் காணியை விடுவிக்கவும், இதற்கெனக் காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளவும் கடற்படையினர் இணக்கம் தெரிவித்திருந்தனர். எனினும் 186 ஏக்கர் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பல்வேறு பாதுகாப்புப் பிரச்சினைகள் உள்ளன எனக் கடற்படை பின்னர் தெரிவித்தது.

இரணைதீவுப் பகுதி, தேசிய பாதுகாப்புக்கு முக்கிய ஓர் இடமாக உள்ளதாலும், போதைப் பொருள் கடத்தல்களைக் கட்டுப்படுத்தும் ராடர் கண்காணிப்பு நிலையங்கள் இருப்பதாலும் இரணைதீவு வடக்குப் பகுதி முழுமையாகத் தேவையென்று கடற்படையினர் கூறியுள்ளனர்.

இந்த நிலையிலேயே மக்கள் கடந்த ஒரு வருடமாகத் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தை இரணை மாதா நகரில் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தப் பகுதியில் மக்களை மீள் குடியமர்த்தும் போது, கடற்கரையோரப் பகுதிகளிலுள்ள கடல்வாழ் உயிரினங்கள் அழிவடையும். அத்துடன், அங்கு குடிதண்ணீர்ப் பிரச்சினை உட்படப் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன எனப் பல்வேறு காரணங்களை அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் சுமார் ஆயிரத்து 100 ஏக்கர் பரப்பளவைக்கொண்ட இரணைத்தீவில் 186 ஏக்கரையாவது முதலில் விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ–7)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

அரச நிர்வாக முடக்கப் போராட்டம்

அரசியல் தீர்வுக்கான முயற்சிகளைக் காத்திரமாக முன்னெடுப்பதற்கு நல்லாட்சி அரசு தவறும் பட்சத்தில், தமிழர் தாயகமான வடக்கு, கிழக்குப் பிரதேசம் எங்கும் அரச நிர்வாகத்தை முடக்கிப் போராட்டம் நடத்துவோம் என்று நல்லாட்சி அரசுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

மக்கள் பங்களிப்புடன் அறவழிப்பட்ட – ஆயுதம் தூக்காத – ஒரு போராட்டத்துக்குத் தயார் எனக் கோடி காட்டுகிறார் அவர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின், சுமார் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தனது ஆதரவு வாக்குகளை உள்ளூராட்சித் தேர்தலில் இழந்து, அரசியல் வறுமையை – வெறுமையை – சூனியத்தை – நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் கூட்டமைப்பை அடுத்து அது எதிர்கொள்ள வேண்டிய மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் தூக்கி நிறுத்துவதற்கு அதன் தலைவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்று அங்கலாய்துக் கொண்டிருந்தோம்.

ஆனால், சுமந்திரன் அதற்கான மார்க்கத்துக்கு வழி வகுத்து விட்டார், காய் நகர்த்தல்களை ஆரம்பித்து விட்டார் என்றே தோன்றுகின்றது.

அவரது கருத்துப்படி பார்த்தால் 'அரச நிர்வாக முடக்கம்' என்ற போராட்ட முஸ்தீபு ஆரவாரத்தை இந்த ஆண்டு இறுதி வரை பிரச்சினையின்றிக் கொண்டிழுக்க முடியும். ஆனால், உண்மையில் இப்படி அறவழிப் போராட்டத்தில் – சட்டமறுப்பு இயக்கத்தில் – ஈடுபட தமிழரசு அல்லது கூட்டமைப்புத் தலைவர்கள் தயாரா என்பதுதான் கேள்வி.

ஜனநாயக வாக்களிப்பின் பரிசாகவும், வெகுமதியாகவும் கிட்டிய பதவிகள், பவிசுகள், வசதிகள், ஆரவார எடுப்புக்கள், கூடவே எடுபிடிகள் என்பவை எல்லாவற்றையும் அனுபவித்த நமது அரசியல் தலைவர்கள், அவற்றை விட்டிறங்கி வந்து இப்படி அறவழிப் போராட்டம் நடத்தவும், சிறைகளை நிறைக்கவும், அதனால் தங்களது பதவி, பவிசுகளை பறிகொடுக்கவும், சில சமயம் உடல் ரீதியான பாதிப்புக்களை எதிர்கொள்ளவும் தயாரா என்பதும், நியாயமான சந்தேகமே.

பதவிகளைப் பெறப் போட்டிபோட்டு, அவற்றைப் பெற்றதும் அவற்றின் மூலம் அரசியல் வியாபாரம் நடத்தும் தலைவர்கள் தமது மக்களுக்காக நியாயமான போராட்டங்களில் துணிச்சலுடன் இறங்குவார்களா என்பதும் ஐயமே.

சுமந்திரன் இப்போது அறிவித்திருப்பது வெறும் ஒரு நாளைக்கு கண் துடைப்பாக நடத்தும் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் அல்ல. அல்லது இப்போது நில மீட்புக்காகவும், வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடிக் கண்டறியவும் நடத்தப்படும் போராட்டங்கள் போல நீண்ட காலத்துக்கு ஒரு கொட்டகைகளில் அமர்ந்திருக்கும் நடவடிக்கையும் அல்ல.

இது வித்தியாசமானது. வியத்தகு வகையில் முன் னெடுக்கப்பட வேண்டியது. அரச நிர்வாக முடக்கம் என்பது தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்றைய தலைமுறைக்கு புதிதானதாகவும் புதிரானதாகவும், இருக்கலாம். ஆனால் இதே தமிழரசின் முன்னைய தலைவர்கள் பெரும் சாதனையாகச் சாதித்துக் காட்டிய உயரிய மார்க்கம் அது.

1956 ஜூன் 5 ஆம் திகதி காலையில் கொழும்பில் இலங்கை நாடாளுமன்றத்தில் 'சிங்களம் மட்டும்' சட்டம் கொண்டு வரப்பட்ட போது, அப்போதைய தமிழரசுக் கட்சித் தலைவர்களால் நாடாளுமன்றத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஒத்தது அது. வன்செயலற்ற, அமைதியான, அறவயப்பட்ட, காந்தீய மார்க்கத்தில் நெறிக்கப்பட்ட, அகிம்சை வழிப்பட்ட 'குந்துமறியல்' போராட்டமாக அது முகிழ்ந்தது. அதன் விளைவாக சிங்களக் காடையர்களின் கண்மூடித்தனமான கொடூரத் தாக்குதல்களை அந்தத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் எதிர்கொண்டனர். கட்டுப்போட்ட காயங்களோடு, இரத்தம் சொட்டச்சொட்ட, 'யுத்தத்தில் காயமடைந்த வீரர்களாக' அதன் பின்னரும் அவர்கள் நாடாளுமன்றுக்குள் புகுந்து, சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிராக 'தமிழ்ப் புலிகளாக' உறுமினார்கள். அது வரலாறு.

தமிழர் தாயக மண்ணில் சிங்கள அரசின் நிர்வாகத்தை அறவயப்பட்ட போராட்ட வழிமுறைகள் மூலம் நிலைகுலையச் செய்து, ஆட்சியைச் சீர்குலைத்து, தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை – வேணவாவை – முழு இலங்கைத் தீவுக்கும், சர்வதேசத்துக்கும் செவிமடுக்கவைத்த மகத்தான பணி இனிமேல்தான் செய்யப்படப் போவதல்ல. தந்தை செல்வாவின் வழி காட்டலில் 1961 முற்பகுதியில் தமிழரசுக் கட்சித் தலைவர்களே அதனைச் செய்து காட்டியுமுள்ளனர்.

தமிழ் மக்களின் மாபெரும் வெகுசனப் பொங்குணர்வாகவும், அரச பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான அறவழிப்பட்ட தமிழ்த் தேசியப் பேரெழுச்சியாகவும், அது அப்போது கட்டவிழ்ந்தது.

1961 பெப்ரவரி 20இல் ஆரம்பமான அந்த ஒத்துழையாமை இயக்கம் சுமார் 3 மாத காலம் நீடித்தது. பல்லாயிரம் தமிழர்கள் வீதிக்கு இறங்கித் தமது கொதிப்புணர்வை ஒன்று சேர்த்து வெளிப்படுத்தினர். வடக்கு, கிழக்கில் அரச இயந்திரம் முற்றாகச் செயலிழந்து, ஸ்தம்பித்து, முடங்கியது. தமிழர் தாயகத்தின் சகல பகுதிகளிலும் அரசின் ஆணை அற்றலிழந்தது. வரலாறு காணாத அந்த மாபெரும் அற வழிப் போராட்டம் ஆயுதவழி அடக்குமுறை மூலம் முறியடிக்கப்பட்டது.

அதன் விளைவாகத்தான் தமிழர் தாயகத்தில் ஆயுதப் போராட்டம் பிறப்பெடுத்து முழு இலங்கைத் தீவுமே இரத்தத்தில் தோயும் அவலம் நேர்ந்தது.

தந்தை செல்வா தலைமையில், அந்த தமிழரசுத் தலைவர்கள் முன்னெடுத்த அந்த காந்தீய மார்க்க உணர் வெழுச்சியை இந்தத் தமிழரசுத் தலைவர்களால் அதே உயர்வில் வழிப்படுத்தி, நெறிப்படுத்த முடியுமா ? சந்தேகம்தான்.

பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கையை இடைநீக்கம் செய்க!

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை

லண்டன், ஏப்.24

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாகச் செயலாக்கும் வரை, பொதுநலவாய அமைப்பில் இருந்து இலங்கையை இடைநீக்கம் செய்யுமாறு பொதுநலவாய அரசுத் தலைவர்களிடம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

பரிந்துரைகலை இலங்கை செயற்படுத்தத் தவறினால், அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பவேண்டும் எனவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மனித உரிமைப் பேரவையின் தீர்மானப் பரிந்துரைகளைச் செயலாக்குவது குறித்து இலங்கையின் ஆமைவேக முன்னேற்றம் தொடர்பாகத் திரும்பத் திரும்பக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராண்டு காலநீடிப்பு தரப்பட்ட போதிலும் 2017 மார்ச்சுக்கும் 2018 ஜனவரிக்கும் இடையே பெரிய முன்னேற்றம் ஏதுமில்லை.

ஐ.நா. மனிதஉரிமைப்பேரவையின் பரிந்துரைகளை இலங்கையால் 2019 மார்ச்சுக்கு முன் செயலாக்க இயலுமா என்ற ஐயப்பாடுகள் எழுந்துள்ளன. ஆனால், இலங்கை அரசு தொடர்ந்து இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. அதனிடம் போதிய உறுதியில்லை என்றாலும், இந்த உறுதிப்பாடுகளை நிறைவு செய்யத் தவறினால் ஏற்படக்கூடிய விளைவுகள் பெரிதாக உணர்த்தப்படவில்லை.

போர்க்குற்றங்களும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களும் பாலியல் வன்செயலும், தொடர்ந்து இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து வரும் தமிழர் தாயகத்தில் கட்டமைப்பியல் இனவழிப்புக் குற்றமும் புரிந்ததாகக் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள ஓர் அரசுடன் கை குலுக்கியதால் பொதுநலவாய அமைப்பு இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் தன் நம்பகத்தன்மையை விட்டுக் கொடுத்து விட்டது.

பல்வேறு வழிகளிலும் தெட்டத்தெளிவான சான்றுகள் வந்து குவிந்துள்ள போதிலும், தப்பே செய்யவில்லை என்று மறுத்து வருகிறது இலங்கை. இந்த வகையில், அப்போதைய ஐ.நா பொதுச் செயலர் பான் கி–மூன் அமர்த்திய வல்லுநர் குழுவின் அறிக்கை, ஐ.நா உள்ளக ஆய்வறிக்கை ('சார்ளஸ் பெற்றி அறிக்கை'), டப்ளின் மக்கள் தீர்ப்பாயம் கண்டறிந்தவை, சனல்4 படைத்த கூடு மறுப்பு வலயம் (நோ ஃபயர் ஸோன்) ஆவணப் படம், பற்பல சிறப்பு அறிக்கையாளர்களும் பன்னாட்டு அரசுசாரா அமைப்புகளும் அளித்துள்ள அறிக்கைகள் போன்ற பல சான்றுகளைக் குறிப்பிடலாம். இவையெல்லாம் 2009ஆம் ஆண்டு ஆயுத மோதலின் இறுதிக் கட்டங்களிலும் கூட இலங்கை அரசு கொடிய போர்க்குற்றங்களும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களும் செய்திருப்பதை நிறுவியுள்ளன.

பன்னாட்டுச் சமுதாயம் இலங்கையின் ஏமாற்றுச் செயல்களை உணர்ந்துவிட்டது என்பது அண்மையில் ஐ.நா மனித உரிமைகளுக்கான ஆணையாளர் சயிட் ராட் அல் ஹுசைனும், துணை உயர் ஆணையர் கேத் கில்மோரும் வெளியிட்ட அறிக்கைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெற்ற 1974ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் பொதுநலவாய மாநாட்டுப் பேராளர்களுக்கு அளித்த விண்ணப்பம் தமிழர்களுக்கு எதிரான இனப் பாகுபாட்டையும் இனவதையையும் எடுத்துரைத்தது.

'இலங்கைத் தமிழர்களின் சிக்கல்களை இந்த மாநாட்டில் கூடியுள்ள பேராளர்கள் பரிவுடன் கருதிப் பார்ப்பார்கள் என்றும், சிக்கலின் தீர்வுக்குத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துவார்கள் என்றும் நம்புகிறோம்.' என அந்த விண்ணப்பம் இறுதியாகச் சொல்லியிருந்தது. ஆனால் இன ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க உறுதியேற்றுள்ள பொதுநலவாயம் 1974 இல் பாராமுகம் காட்டிப் போனது.

அன்று தொடங்கி, இலங்கை அரசு திட்டமிட்ட முறையிலும் பரவலாகவும் இனக் கண்ணோட்டத்தில் தமிழர்களின் மனிதவுரிமைகளைத் தொடர்ந்து மீறியுள்ளது. போரில் பல உயிர்களும் உடைமைகளும் பறிபோயின. சுதந்திரமும் நீதியும் வேண்டி நிற்கும் தமிழர்களின் துயரம் இன்றும் தொடர்கிறது.

இலங்கை அரசு உறுதியளிப்பது போன்ற நல்லிணக்கச் செயல்வழி எதுவும் மெய்ப்படக் காணோம். அது தீர்மானப் பரிந்துரைகளுக்குச் செயல் வடிவம் தரத் தவறிவிட்டது. உள்நாட்டுப் போர் முடிவுற்றதிலிருந்து இராணுவ முகாம்களும்' உயர் பாதுகாப்பு வலையங்களும் தமிழர்களின் நிலப்பரப்பெங்கும் முளைத்துள்ளன.

இராணுவம் குடியியல் ஆட்சியைக் கையிலெடுத்துக் கட்டுப்படுத்தி வருகிறது. அரசியல் கைதிகளும் போர்க் கைதிகளும் இன்றும் சிறையில் வாடுகின்றனர். தமிழர்களையே முதல் இலக்காகக் கொண்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கம் செய்யப்படவில்லை. காணாமற்போனவர்களின் பட்டியலும் கட்டாயக் காணாமலடித்தல்களின் பட்டியலும் இன்று வரை வெளியிடப்படவில்லை.

இன்னுமொரு சிறுபான்மை மக்கள் சமுதாயமாகிய முஸ்லிம்கள் மீது தொடர்ந்து வரும் தாக்குதல்களுக்கு இலங்கை அரசு பாராமுகம் காட்டியுள்ளது. சிங்களப் பேரினவாதிகளும் இன வெறியர்களும் முஸ்லிம்கள் மீது நேரடிக் கொடுந்தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். அவர்களின் உடைமைகளுக்குத் தீமூட்டியுள்ளனர். தொழில்–வணிக நிறுவனங்களை அழித்துள்ளனர். அனைத்துலகச் சமுதாயம் கட்டிப் போடா விட்டால், இந்த ஆட்சி தன் சொந்த மக்களுக்குள்ளேயே சில பிரிவினர் மீது இனவழிப்பு வன்முறையில் ஈடுபடக் கூடிய ஒன்று என்பது வெள்ளிடைமலை–என்றுள்ளது. (ஐ–100)

அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இலங்கைக் கடற்படையே பொறுப்பு

சீனத் தூதுவரிடம் பிரதமர் உறுதி

இலங்கையின் அம்பாந்தோட்டைத்துறை முகத்தைச் சீனா இராணுவ, பாதுகாப்பு நோக்கங்களுக்காகப்பயன்படுத்தலாம் என வெளியாகும் கருத்துக்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

இலங்கைக்கான சீனா தூதுவருக்கும் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பொன்றின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைத் துறை முகத்தைச் சீனா இராணுவமயப்படுத்தவில்லை அந்தத் துறை முகத்தின் பாதுகாப்புக்கு இலங்கைக் கடற்படை மாத்திரமே பொறுப்பு எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டத்தை தான் முழுமையாக ஆதரித்துவருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் பெரும் அபிவிருத்தி திட்டங்களுக்கு இலங்கை மிகுந்த முக்கியத்துவத்தை வழங்குகின்றது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக தற்போது முன்னெடுக்கப்படும் திட்டங்களை துரிதப்படுத்தவும் சீனாவின் முதலீட்டை மேலும் பெற்றுக் கொள்வது குறித்தும் இலங்கை அரசு ஆர்வமாகவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

நாளை

25.04.2018
புதன்கிழமை
நட்சத்திரம் : மகம் பி.ப.4.05 வரை
திதி :தசமி மு.ப.11.57 வரை
சுபநேரம்: 4.30 – 6.00 வரை
இராகுகாலம்: 12.00 – 01.30 வரை

பயிற்சி முகாமில் மயங்கிய படையினரில் இரண்டு பேர் கவலைக்கிடமான நிலையில்

வவுனியா, ஏப். 24

வவுனியா- பம்பைமடு இராணுவப் பயிற்சி முகாமில் நேற்றுமுன்தினம் நண்பகல் திடீர் சுகவீனமடைந்த 19 படையினர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கடும் வெயிலுக்கு மத்தியில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட நீரிழப்பினாலேயே அவர்கள் பாதிக்கப்பட்டனர் என இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பம்பைமடுவில் உள்ள 61-1 பிரிகேட்டின் கீழ் உள்ள பற்றாலியன் பயிற்சிப் பாடசாலையில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்றது.

25 ஆவது இலகு காலாட் படையைச் சேர்ந்த 50 இற்கு மேற்பட்ட படையினருக்கு புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, அடுத்தடுத்து படையினர் மயங்கி விழுந்தனர்.

முதலுதவிச் சிகிச்சைகளுக்குப் பின்னர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 19 படையினரில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது என்றும் ஏனையோரின் உடல் நிலை தேறியுள்ளது எனவும் வவுனியா மருத்துவமனை தகவல்கள் கூறுகின்றன.

எனினும், அனைத்துப் படையினரும் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பயிற்சிப் பாடசாலை 10 ஆண்டுகளாகச் செயற்படுகிறது என்றும் இத்தகைய சம்பவம் இடம்பெற்றிருப்பது இதுவே முதல்முறை என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வவுனியா மருத்துவமனையில் படையினர் சேர்க்கப்பட்டமையை அடுத்து, மருத்துவமனை வளாகத்துக்குள் ஊடகவியலாளர்கள் நுழைவதற்கு நிர்வாகமும் இராணுவமும் தடை போட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் வடக்கு – கிழக்கில் அலங்கார மீன் உற்பத்தி!

கொழும்பு, ஏப். 24

இலங்கையில் அலங்கார மீன் ஏற்றுமதி மற்றும் உள்ளூர் வர்த்தகத்திற்கான வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏற்றுமதித் துறையைக் கூடுதலான வருமானத்தைப் பெறக்கூடிய அலங்கார மீன் தொழில்துறைக்கு சர்வதேச தரத்தை அறிமுகப்படுத்தல், தேவையான தொழில்நுட்பம், நிதி வசதிகளை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும்.

இதனூடாக தேசிய வர்த்தகம் மேம்படும் என்றும் எதிர்பார்க்கிறோம் என அலங்கார மீன் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள சங்கத்தின் தலைவர் ரவிந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்பொழுது இந்தத் தொழில் துறையில் ஏழு மாகாணங்களில் சுமார் 250 பேர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தொகையை 500 ஆக அதிகரிப்பது நோக்கமாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அலங்கார மீன் உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

எரிபொருள், சமையல் வாயு விலை மே மாதம் முதலாம் திகதி உயரும்

கொழும்பு, ஏப். 24

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு செய்துகொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் மே மாதம் முதலாம் திகதி எரிபொருள் விலை அதிகரிப்புக்கான சூத்திரம் ஒன்றை அரசு அறிமுகம் செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூத்திரத்தின்படி பெற்றோல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் விலை உயர முடியும் எனவும் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பந்துல எம்.பி. கூறுகிறார்

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள 3 வருட உடன்படிக்கையின்படி இலங்கைக்கு மூன்றாவது கட்ட உதவி எதிர்வரும் ஜுன் மாதம் கிடைக்கப்பெறவுள்ளது.

இந்த கடன் தொகை கிடைக்கப் பெறுவதற்கு முன்னர் உடன்படிக்கையில் செய்துகொள்ளப்பட்ட அம்சங்களை அரசு நிறைவேற்ற வேண்டியுள்ளது.

இதன் ஓர் அங்கமாகவே, எரிபொருளுக்கான சூத்திரம் அறிமுகம் செய்யப்படுகின்றது. புதிதாக வரிகள் அறிமுகம் செய்யப்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள உலக தொழிலாளர் தினத்தில் மக்களை அறிவுறுத்தவுள்ளோம் எனவும் பந்துல எம்.பி. மேலும் அறிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் 41 ஆவது நினைவு நாள் யாழ். நகரில் வியாழன்று

தந்தை செல்வாவின் 41 ஆவது நினைவு நாள் நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் பேராசிரியர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெறும்.

இதில் வரவேற்பு உரையை பேராசிரியர் ச.சத்தியசீலன், அஞ்சலி உரையை மௌலவி ஏ. எம்.ஏ. அஸில், அருட் தந்தை பேராசிரியர் எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்துவர்.

தலைமை உரையை பேராசிரியர் எஸ். ஜெபநேசன் நிகழ்த்துவார். நினைவுப் பேருரையை நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணரட்ண "தமிழ்த் தேசியத்தின் தந்தை'' எனும் தலைப்பில் ஆற்றுவார்.

(இ)

பேராதனை பூங்காவின் வருமானம் ரூ. 4 கோடி!

கொழும்பு, ஏப். 24

பேராதனை தாவரவியல் பூங்காவை பார்வையிடுவதற்காக கடந்த பெப்ரவரி மாதத்தில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் 98 ஆயிரத்து 411 பேரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 58 ஆயிரத்து 154 பேரும் வருகை தந்திருந்தனர்.

தேசிய சுற்றுலாப் பயணிகள் மூலம் தாவரவியல் பூங்காவுக்குக் கிடைத்துள்ள வருமானம் நான்கு கோடி 20 லட்சம் ரூபாவாகும்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மூலம் 85 லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில்

பல்வேறு சம்பவங்களில் ஆறு பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 24

24 மணித்தியால காலப்பகுதியில் நாட்டின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற விபத்துக்கள் மற்றும் அசம்பாவிதங்கள் என்பவற்றில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் நேற்றுத் தெரிவித்திருந்தது.

தெல்தெனிய, ராகமை, மஹியங்கனை, குருநாகல், நிட்டம்புவ ஆகிய பிரதேசங்களில் இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன என்றும் பொலிஸ் தலை மையகம் அறிவித்துள்ளது.

மின் தடை

யாழ்ப்பாணம்,ஏப்.24

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை –

கிளிநொச்சி பிரசேத்தில் – தருமபுரம், புளியம்பொக்கணை, விசுவமடு, தேராவில், விசுவமடு பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும் –

வவுனியா பிரதேசத்தில் – அட்டம் பஸ்கட கிராமம், மதவுவைத்தகுளம், தவசிக்குளம் கிராமம், உக்குளாங்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

கூட்டு எதிர்க் கட்சி சில விடயங்களில் அலட்டிக் கொள்வதில்லை – மஹிந்த

கொழும்பு, ஏப். 24

அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் தனிப்பட்ட உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கும் சட்ட மூலங்கள் குறித்து கூட்டு எதிர்க்கட்சி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை யென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரெஜிரண துங்கவின் நினைவுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியினால் நாடாளுமன்ற ஆரம்ப அமர்வின் போது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்யும் திருத்தச் சட்ட மூலம் முன்வைக்கப் படவுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மஹிந்த ராஜபக்ஷ எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமித் உட்பட 18 பேருக்கும் தொடர்ந்தும் விளக்கமறியல்!

கொழும்பு, ஏப். 24

கண்டி கலவரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மஹசோன் பலகாய அமைப்பின் அமித் வீர சிங்க உள்ளிட்ட 18 பேரும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் தெல்தெனிய நீதிவான் நீதிமன்றத்தில் இவர்கள் முன்னிலைப்படுத்தியபோது எதிர் வரும் மே மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தினசரி ராசி பலன் (24.04.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பிவருடம் சித்திரிரை 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நவமித்திதி. பகல் 12.26 மணி வரை பின்னர் தசமி. நட்சத்திரம்: ஆயிலியம் மாலை 3.58 மணி வரை. பின்னர் மகம். சித்தயோகம் பகல் 12.26 மணி வரை அதன் மேல் மரணம் மாலை 3.58 மணி வரை. பின்னர் சுபயோகம்.

ராகுகாலம் - மாலை 3.14 மணி வரை 4.47 மணி வரை.
சுபநேரம் - பகல் 10.26 மணி வரை 11.56 மணி வரை.
திவசம் செய்ய வேண்டிய திதி - சித்திரை மாத வளர்பிறை தசமி.
பிறந்த நட்சத்திர வழிபாடு - பூசம். ஆயிலியம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி

மேஷம் – கவலையான நாள். பணவரவு குறையும். ஆரோக்கியம் குறைவடையும். அல்லல், அலைச்சல், விருப்பமில்லாத இடத்தில் வேலை பார்த்தல் முதலிய கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும். பகை, கடன் தொல்லைகள் உண்டாகும்.

ரிஷபம் – சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. கோபதாபங்களும், மனக் கஷ்டமும் இருக்கும். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது.

மிதுனம் – ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். எதையும் சாதிக்கும் வல்லமை உண்டாகும். உத்தியோகத்தில் திறம்பட செயற்பட்டு நல்ல பெயர் வாங்குவார்கள். உடல் நலம் சிறப்பாக இருக்கும்.

கடகம் – இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். குடும்ப சுப காரியம், பொன் நகை வாங்குதல், ஸ்தல தரிசனம் இனதாக நடக்கும். விடுபட்ட உறவினர்கள் வலிய வந்து சேர்வார்கள்.

சிம்மம் – யோசனையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வியாபாரம் மந்த நிலையில் நடக்கும். உத்தியோகத்தில் வேலைப் பளுவும், அலைச்சல்களும் அதிகமாகும்.

கன்னி – உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். உடல் நலம் மிகவும் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். செய் தொழில் முன்னேற்றம் உண்டாகும். அரசு காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

துலாம் – சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செய் தொழில், வியாபாரம், உத்தியோகம் எதுவானாலும் கஷ்ட நஷ்டங்கள் இருந்து வரும். சகோதர உறவு வலுவடையும்.

விருச்சிகம் – நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உடலில் இருந்த உபாதைகள், நோய்கள் விலகும். வாகனம் வாங்குவார்கள்.

தனுசு – துன்பமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். உடலில் சோர்வு, மனக் கலக்கம் போன்றவற்றால் பாதிப்படைவார்கள். தொழில் ரீதியான சில இடைஞ்சல்கள் வரக்கூடும்.

மகரம் – மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். எங்கும் எதிலும் தடை சூழும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை அவசியம்.

கும்பம் – அனுகூலமான நாள். பணம் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். உடலாரோக்கியம் சீரடையும். குடும்ப ஒற்றுமை, காரிய நன்மை ஆகியன உண்டாகும். காணி, வீடு விற்றல், வாங்குவதில் ஆதாயம் உண்டாகும்.

மீனம் – அதிர்ஷ்டமான நாள். பணபலம், மனபலம் அதிகரிக்கும். செய்தொழில் வளர்ச்சியடையும். சிலருக்கு தொழில் ரீதியாக வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் உண்டாகும். திடீர்த் திருமண வாய்ப்புக்கள் வரும்.

சந்திராஷ்டம நாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகாரியங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும்

திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி ஏப். 30 இல்

யாழ்ப்பாணம், ஏப். 24

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், சைவ சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும், சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப்போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1, 2 பாலர் பிரிவிலும், தரம் 3, 4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவுக்கு "மாசில் வீணையும் மாலை மதியமும்", "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" ஆகிய இரு திருமுறைகளும் கீழ் பிரிவுக்கு "கூற்றாயினவாறு விலக்ககிலீர்", "நிலைபெறுமா றெண்ணுதியேல்" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர் வரும் 8 ஆம் திகதி ஆகும். பரிசில்கள் எதிர் வரும் 9 ஆம் திகதி திருநாவுக்கரசு நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப 3.30 மணி முதல் 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக சமய பிரசாரகரும், பரீட்சைச் செயலாளருமான சு. சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ)

உரிய பதில் கிடைக்கும் வரை கூட்டங்களை புறக்கணிப்போம்

மிகை ஊழியர்களாக நியமிக்கப்பட்ட அதிபர்கள் முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 24

மிகை ஊழியர்கள் என்ற அடிப்படையில் வடக்குப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட அதிபர்களாகிய நாம் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே எமது கோரிக்கைகளுக்குச் சரியான பதில் கிடைக்கும் வரையிலும் நாம் மாதாந்தக் கூட்டங்களுக்குச் சமூகம் கொடுக்க மாட்டோம் என்று பாதிக்கப்பட்ட அந்த அதிபர்கள் கவலை தெரிவித்தனர்.

வலய மாவட்டங்களில் இடம்பெறும் அதிபர்களுக்கான கூட்டங்களுக்குச் செல்லாமை தொடர்பாகவே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் -

வடக்கு மாகாணத்தில் போர்ச் சூழலில் கடமை நிறைவேற்று அதிபர்களாக நாம் பாடசாலைகளில் கடமை ஆற்றுகின்றோம். அதிக கஷ்டப் பிரதேசங்களில் சேவை மனப்பாங்குடன் நாம் கடமையாற்றினோம். இதனை அடிப்படையாகக் கொண்டு 2012 ஆம் ஆண்டு மிகை ஊழியர்கள் அடிப்படையில் 343 பேருக்கு அதிபர் நியமனங்கள் கிடைக்கப்பெற்றன. அதன்பின்னர் நாம் ஒவ்வொரு பாடசாலைகளிலும் அதிபர் தரம் 3, 2 களில் சேவையாற்றினோம். ஆனால் கடந்த வார இறுதி முதல் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

அதிபர்களுக்கு வழங்கப்படும் மேலதிகபடி எமக்கு நிறுத்தப்பட்டுள்ளது புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின்படி தற்போது 2 ஆயிரத்து 50 முதல், 6 ஆயிரம் வரை பாடசாலைகளின் தரத்துக்கு ஏற்ப அதிபர்களுக்கு மேலதிகபடி வழங்கப்படுகின்றது.

ஆனால் எமக்கு அது வழங்கப்படுவதில்லை. 2017 ஆம் ஆண்டின் இறுதிவரை வழமையான மேலதிக படி எமக்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது அதுவும் நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான பல்வேறு காரணங்களால் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம்.

ஆகவே எமக்குச் சரியான பதில் கிடக்கும் வரையில் நாம் மாதாந்தக் கூட்டங்களுக்குச் சமூகம் கொடுக்க மாட்டோம். - என்றுள்ளது.

8 மாதக் குழந்தையுடன் தந்தை ரயில் முன்பாய்ந்து தற்கொலை

கொழும்பு, ஏப். 24

தந்தையொருவர் தனது 8 மாதக் குழந்தையுடன் ரயிலின் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் ஒன்று குருநாகலில் இடம்பெற்றுள்ளது.

குருநாகல், பல்லேகொட்டுவ பகுதியிலே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் , காங்கேசன்துறையிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலின் முன் பாய்ந்து 30 வயதுடைய தந்தையொ ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார். பல்லேகொட்டுவ-வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இந்த நபர் இவ்வாறு தனது குழந்தையுடன் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இந்த நபர் 2 ஆவது மனைவியுடன் வாழ்ந்துவந்துள்ளார். இந்த நிலையில், இவர் குடும்பத்தகராறு காரணமாகத் தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இரு சடலங்களும் குருநாகல் மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கடல் பகுதி கொந்தளிக்கும் பேரலைகள் உயர எழும்; சுனாமி ஏற்படாது!

கொழும்பு, ஏப். 24

இலங்கைக்கு அருகே தாழ முக்கம்ஒன்றுஉருவாகியுள்ளதாலேயே கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, உயரமான அலைகள் தோன்றுகின்றன என்றும், சுனாமி ஆபத்து ஏற்படாது எனவும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடல் மட்டம் திடீரென அதிகரிப்பதுடன், கடல் அலைகள் உயரமாக மேல் எழும்ப வாய்ப்புள்ளது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்திருந்தது.

இந்த நிலையில் இலங்கையிலும், தமிழ்நாட்டின் தென் பகுதியிலும் பல இடங்களில் கடல் நீர்மட்டம் அதிகரித்து, தரைப்பகுதிக்குள் கடல்நீர் உட்புகுந்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்

உயரமாக எழுந்த பேரலைகளால் கரையோரப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதற்கான காரணம் குறித்து கருத்து வெளியிட்ட இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர்-

இன்று வரை இந்த கால நிலை நீடிக்கும். இலங்கைக்கு அருகே தாழமுக்கம் ஒன்று உருவாகியுள்ளதாலேயே கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, உயரமான அலைகள் தோன்றுகின்றன. இதனால் சுனாமி ஆபத்து ஏற்படாது. கடல் அலைகள் இரண்டரை தொடக்கம் மூன்று மீற்றர் உயரத்துக்கு மேலெழும்பும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே கற்பிட்டியில் முதுபந்திய தீவுக்குள் கடல்நீர் உட்புகுந்துள்ளது.

இதனால் தீவின் ஒரு பகுதி, பிரதான பகுதியில் இருந்து துண்டிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது தேசிய இளைஞர் மாநாடு!

கொழும்பு, ஏப். 24

இரண்டாவது தேசிய இளைஞர் மாநாட்டில் அரச தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சுதர்ஷன குணவர்தன உரையாற்றினார்.

இந்த மாநாடு கடந்த சனிக்கிழமை அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

உங்களது ஆலோசனைகள் மற்றும் சுதந்திரத்துடன் கூடிய சாதகமான விடயங்கள் உங்களையும் அரச நிறுவனங்களையும் வலுப்படுத்தும் .

இதற்கு ஏற்றவகையில் உங்களது சிந்தனைகளை நடைமுறைப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

நிலையான சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்பதை அடைவதற்கான விடயங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மொறகஹாகந்தை நீர்தேக்கத்தினூடாக சிறுபோக உற்பத்திக்கான நீர் விநியோகம்

கொழும்பு, ஏப். 24

மொறகஹாகந்தை நீர்தேக்கத்தின் கவுடுல்லா ஓடையின் ஊடாக சிறுபோக உற்பத்திக்கான நீர் விநியோகம் ஆரம்பமானது.

மகாவலி திட்டத்தின் இறுதி நீர்த்தேக்க கட்டுமானப் பணியின் கீழ் இந்த நீர்விநியோகம் தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இரஜரட்டை பகுதி உற்பத்தி நடவடிக்கைகளுக்கே நீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

சுமார் 7800 ஏக்கரில் நெற் செய்கை மேற்கொள்வதற்கு இதன்மூலம் முடியும் என்று கவுடுல்ல நீர்ப்பாசன பொறியியலாளர் புனர்ஜீ படோராகம தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் வெசாக் பந்தல் மலேசியாவில்!

இலங்கை இராணுவம் மலேசியாவில் வெசாக் பந்தல் ஒன்றை அமைக்கவுள்ளது.இந்த வெசாக் பந்தல் எதிர்வரும்வெசாக்தினம் இடம்பெறவுள்ளது.

மலேசியாவின் கோலாலம் பூர் நகரில் சரித்திரம் மிக்க வெசாக் பந்தலை இராணுவ பொறியியல் பரிவைச் சேர்ந்த படையினர் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனா நாயக்க வழிகாட்டலின் கீழ் அமைக்கவுள்ளனர்.

இலங்கை இராணுவ தளபதி மலேசியாவுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது கோலாலம்பூரிலுள்ள விகாரையின் விகாரதிபதியைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

வலுவான கடவுச்சீட்டு பட்டியலில் இலங்கைக்கு 94 ஆவது இடம்!

கொழும்பு, ஏப். 24

உலகில் வலுவான கடவுச்சீட்டுப் பட்டியலில் இலங்கைக்கு 94 ஆவது இடம் கிடைத்துள்ளது.

Global passport power rank index 2018 என்ற பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைவாக இலங்கைக்கு 39 புள்ளிகள் கிடைத்துள்ளன. விசா வழங்கலை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018 ஆய்விற்கமைவாக இம்முறையும் உலகின் காத்திரமான கடவுச் சீட்டுக்கான முதலிடத்தை சிங்கப்பூர் பெற்றுக் கொண்டுள்ளது. இதற்கு 164 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

163 புள்ளிகளைப் பெற்ற தென்கொரியாவிற்கு இரண்டாவது இடம் கிடைத்துள்ளது.

162 புள்ளிகளைப் பெற்ற ஜப்பானுக்கும் ஜேர்மனுக்கும் 3ஆவது இடம்கிடைத்துள்ளது. 161 புள்ளிகளைப் பெற்ற 6 நாடுகள் நான்காம் இடத்தைப் பெற்றுள்ளன. 58 புள்ளிகளைப் பெற்று இந்தியா 76 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் ஆப்கானிஸ்தான் 25 புள்ளிகளைப் பெற்று இறுதியிடத்தைப் பெற்று 100 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

அனுராதபுரம், இப்பலோகம– மானேவ பிரதேசத்தில் சுவஸ்திகம எழுச்சிக்கிராமம் திறந்து வைக்கப்பட்டது

கொழும்பு, ஏப். 24

புதியஎழுச்சிக்கிராமம்வேலைத் திட்டத்தின் கீழ் அனுராதபுரம், இப்பலோகம – மானேவ பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 'சுவஸ்திகம' என்ற 58 ஆவது எழுச்சிக் கிராமம் மக்கள் பாவனைக்காக பொது மக்களிடம் கையளிக்கப்படது.

இதுதொடர்பான நிகழ்வு நேற்றுக் காலை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம் பெற்றது.

இந்தக் கிராமத்தில் 25 வீடுகள் அமைந்துள்ளன. நீர், மின்சாரம், உட்பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

100 பயனாளிகளுக்கு ஒரு கோடி ரூபா பெறுமதியான 'விசிறி கடன்' காசோலையும் 50 பயனாளிகளுக்கு ஒரு கோடி ரூபா பெறுமதியான 'சொந்துறுபியச' வீடமைப்புக் கடனும் அங்கு வழங்கப்படும்.

இது தவிர, 50 சிறுநீரக நோயாளர்களுக்கு ஒரு கோடியே 20 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட வீடமைப்புக்கான நிதியுதவியும் அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் வழங்கப்பட்டது.

(கு)

500 ஹெக்டயர் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச் செய்கை!

கொழும்பு, ஏப். 24

இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் இந்த வருடத்தில் நான்கு மாவட்டத்தில் 500 ஹெக்டயர் நிலப்பரப்பில் புதிதாக இறப்பர் செய்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

கேகாலை, கண்டி, கம்பஹா, குருநாகல் ஆகிய மாவட்டங்கள் இதற்காகதெரிவுசெய்யப்பட்டுள்ளன என திணைக்களத்தின் கேகாலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ். சீ.சுசந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

ஆபத்துக்கள் உள்ளபோதும்

கழுத்தளவு நீரில் மிதந்து இறால், மீனைக் கையால் பிடிக்கும் பெண்கள்!

தமிழகம், இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை கிராமப் பெண்கள் ஆபத்தை அறியாமல் கழுத்து அளவு தண்ணீரில் இறங்கி உணவுக்காக கைகளால் இறால் மீன்களை பிடிக்கின்ற நிலைமையில் வாழ்ந்து வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகாவில் உள்ளது காரங்காடு மற்றும் சேந்தனேந்தல் கடற்கரை கிராமம். அங்குதான் இவர்கள் கைகளால் இறால்களைப் பிடிக்கின்றனர்.

இக்கிராமத்தில் மிக பெரிய சதுப்பு நில காடு அமைந்துள்ளது. தமிழகத்தில் இரண்டாவது சதுப்பு நில காடு என்ற பெறுமையும் இந்தக் கிராமத்திற்கு உண்டு.

இந்த சதுப்பு நில பகுதிகளில் கடல் பசு, கடல் ஆமை, ஆக்டோபஸ் என அழைக்கப்படும் கணவாய் மீன் உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கான சிறு சிறு கடல் வாழ் உயிரினங்கள் உள்ளன.

மேலும், சதுப்பு நில காடுகளில் உள்ள மரங்களில் தங்குவதற்காகவும், இறை தேடியும் வருகின்ற வெளிநாட்டு பறவைகள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றன.

ஒருவகையான பொழுதுபோக்கு இந்தப் பகுதியில் உள்ள மிகப்பெரிய ஆறான கோட்டைக்கரை ஆற்றில் வரும் உபரி நீர் கிழக்கு கடற்கரைச் சாலையை கடந்து கடலில் கலக்கிறது.

இப்பகுதியில் கடல்நீரும், ஆற்று நீரும் சங்கமிக்கும் பகுதியில் கையால் இறால் மீன் பிடிக்கும் பழக்கம் இன்றளவும் நடைமுறையில் இருந்து வருகிறது.

இது ஒருவகையான பொழுது போக்கு என கூறும் அப்பகுதி கிரமவாசிகள், ஒரு காலத்தில் இப்படி பிடிக்கப்படும் இறால் மீன்கள் வீட்டுக்குத் தேவையானது போக விற்பனை செய்யப்படுவதும் வழக்கமாக இருந்து வந்தது என்கின்றனர்.

இந்த வகை மீன்பிடிப்பில் ஈடுபடும் பெண்கள் கையால் இறால் பிடிக்கும் சமயங்களில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விலை உயர்ந்த சுமார் ஒரு கிலோவுக்கு மேல் இருக்கும் சம்பா நண்டுகளும் கிணைடக்க வாய்ப்பு உள்ளதாகவும் கூறுகின்றனர்.

பெரும்பாலும் கடல் உள்வாங்கும் நேரத்தில்தான் அதிக அளவில் இப்படி இறால் பிடிக்கச் செல்வார்களாம்.

பழைய முறைப்படி பரி என்று அழைக்கக் கூடிய பனை ஓலையால் பின்னப்பட்ட கூடை ஒன்றை தலையில் கட்டி பின் பக்கமாகத் தொங்கவிட்டு கொள்கின்றனர்.

சுமார் 5 நபர்களுக்கு மேல் அதிகபட் சமாக 10 நபர்கள் வரிசையாக தண்ணீ ரில் இறங்கிஉட்கார்ந்து, கழுத்தளவு ஆற்று தண்ணீரில் மிதந்து கொண்டு இரண்டு கைகளால் தண்ணீருக்குள் தடவியபடி தண்ணீருக்கு அடியில் இறால் மீனைத் தேடிப்பிடிப்பார்கள்.

அப்போது, அவர்களின் கையில் தட்டுப்படும் இறாலை பிடித்து கூடையில் போட்டுக்கொள்வர்கள். இந்த முறையில் பெரும்பாலும் கூனி என அழைக்கப்படும் வெள்ளை நிறத்திலான சிறிய வகை இறால்களே அதிகம் கிடைக்கும்.

ஆனால் அதிஷ்டம் இருந்தால் சில நேரங்களில் கூடுதல் விலை போகும் கறுப்பு நிற இறால் வகைகளும் கிடைப்பது உண்டு.

பொதுவாக ஒரு நபர் அதிகபட்சமாக 2 முதல் 3 கிலோ வரை பிடித்து விடுகிறார் எனவும் இப்படிப் பிடிக்கப்படும் இறால் அதிக சுவையுடன் இருக்கும் எனவும் அப்பகுதி கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால்; சில நேரங்களில் கெண்டை, கார்த்திகை முரள், மணலை, சிரையா, போன்ற சிறிய வகை மீன்களும் இவர்களிடம் பிடிபடுவதுண்டு.

ஆபத்தை தேடி...

பல நேரங்களில் கையால் தடவி இறால் பிடிக்கும்போது நண்டுகள் கடித்து விடுவதும், கண்ணுக்குத் தெரியாமல் கடலுக்குள் கத்தியை விட கூர்மை தன்மை கொண்ட ஆக்கு என அழைக்கப்படும் ஒரு வகை கடல் வாழ் உயிரினம் வெட்டி பெரும் காயங்கள் ஏற்படுவதும் உண்டு என்கின்றனர் இந்த கிராம மீனவப் பெண்கள்.

கழுத்து அளவு தண்ணீரில் நீந்திக் கொண்டு இறால் மீன் பிடித்து கொண்டிருந்த பார்வதி பி.பி.ஸி தமிழிடம் பேசிய போது, “நாங்க மணகுடியில் இருந்து வருகிறோம். ஒரு நாளைக்கு அரை கிலோவும் பிடிப்போம், ஒரு கிலோவும் பிடிப்போம். ஏன் ரெண்டு கிலோ கூட பிடிப்போம். கையில தட்டுறதுக்கு தக்கன இருக்குறத கையில தடவி தான் பிடிப்போம். இது வெஞ்சனத்துக்கு ஆகும் கறிக்கு ஆகும். எங்க நேரத்துக்கு நெறைய கெடச்சா பொரிச்சு சாப்புடுவோம் இல்லைன்னா சும்மா ஒரு கத்திரிக்காய் போட்டு சமைத்து சாப்புடுவோம். வீட்டுக் காகதான் வேற விலைக்கு கொடுக்கமாட்டோம்.” என்றார்.

மேலும் தாங்கள் தினமும் வருவதில்லை அமாவாசை சமயத்தில் மட்டும் ஐந்து அல்லது ஆறு பேராக வந்து மீன் பிடிப்பதாகக் கூறும் பார்வதி, கடையில் வாங்கும் இறாலை காட்டிலும் கைகளில் பிடிக்கும் இறால்களுக்கு சுவை அதிகம் என்பதால் இதனை தங்களது விருப்பதிற்காக செய்வகிறோம் எனக் கூறுகிறார்.

இறால் பிடிப்பதை தவிர்த்து, ஆடு மேய்ப்பது, நூறு நாள் வேலைக்குச் செல்வது ஆகிய பணிகளில் ஈடுபடுவதாக கூறுகிறார் இறால் பிடித்துக் கொண்டிருந்த சகாயராணி.

இந்த வகை மீன் பிடிப்பில் ஈடுபடும் பெண்கள்; கடலோர கிராமங்களில் வசிக்கக் கூடியவர்களே. இவர்களில் பெரும்பாலானவர்கள் மீனவர்கள் மற்றும் விவசாயிகள். ★

கிளிநொச்சியில் கடும் வறட்சி!

கொழும்பு, ஏப். 24

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக பெருமளவான பயன்தரும் மரங்கள் அழிவடையும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக நிலவி வரும் வறட்சி நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

யுத்தத்தின் பின்னர் மீள்நடுகை செய் யப்பட்ட தென்னை மரங்கள் மற்றும் மா, பலா போன்ற மரங்களும் அழிவடைந்து வருகின்றன என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

பயன்தரு மரங்கள் இவ்வாறு அழிவடைகின்ற போதிலும் இதற்கான தகுந்த நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

திருமலையில் புத்தாண்டு நிகழ்வுகள்!

திருகோணமலை, ஏப். 24

திருகோணமலையில் தமிழ் சிங்கள புத்தாண்டு விளையாட்டு போட்டி நிகழ்வுகள் மாவட்ட மேலதிக அரச அதிபர் கே.அருந்தவராஜா தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடத்திய இந்தப் போட்டி நேற்று முன்தினம் மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றன.

மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்ற இந்த விளையாட்டுப்போட்டி நிகழ்ச்சிகளில் கயிறு இழுத்தல், தலையணை அடி, சாக்கோட்டம், பனிஸ் உண்ணல், முட்டியுடைத்தல், யானைக்கு கண்வைத்தல், சங்கீத கதிரை, நீர் நிரப்பிய பலூன் வீசியெறிதல், அழகு ராணி போட்டி என பல்வேறு பிரிவிலான நிகழ்ச்சிகள் நடைபெற்றமை விசேட அம்சமாகும்.

வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உட்பட ஏனைய பதவி நிலை உத்தியோகத்தர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் மாவட்ட செயலகதிட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.பரமேஸ்வரன், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் என்.பிரதீபன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எம்.கலைஞானசுந்தரம், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் உட்பட பதவிநிலை உத் தியோகத்தர்கள், சக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(க)



‘நான் நேரில் நானாகவே வந்து உங்களுக்கு அமைதியும் ஆனந்தமும் தருவேன்’

— சத்யசாயி பாபா

சாயி பக்தர்களுக்கு, பகவான் தெய்வீக அவதாரமாக காணப்படுகின்றார். மானிட தெய்வமாக வாழ்ந்து காட்டிய பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா, மகா சமாதியிலும் அவரது தெய்வீகத்தை வெளிப்படுத்திக் கொண்டுதானிருக்கிறார். கிருஷ்ண பரமாத்மா மனிதனா அல்லது தெய்வ புருஷனா என்ற சந்தேகத்தைத் தெளியப்படுத்தியது பகவத் கீதையாகும்.

மனித பிறவி எடுத்து,மனித இயல்புகளுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து விட்ட ஒரு தெய்வ புருஷனே பகவான் கிருஷ்ணன் என்பதைக் கீதை உணர்த்துகிறது.

மனித இயல்புகளுக்கு அப்பாற்பட்ட தெய்வம், மனித வாழ்க்கையோடு நேரடித் தொடர்பு கொள்வதில்லை. நேரடித் தொடர்புகொள்ளாத தெய்வம், மனித வாழ்க்கையின் நன்மை தீமைகளில் அவ்வப்போது பங்குபெறுவதில்லை. மனித சுபாவங்களில் பங்குபற்றிக் கொண்டு, தெய்வ நிலைக்கு மனிதனை இழுத்துச் செல்லும் பாலமாகத்தான் அவதாரங்கள் அவதரிக்கின்றன. இராம அவதாரமும், கிருஷ்ண அவதாரமும், சாயி அவதாரங்களும் இதைத் தான் நமக்கு போதிக்கின்றன.

பிறப்பையும் இறப்பையும் பிரித்துப் பார்க்கமுடியாது. அது ஆண்டவனின் அனுக்கிரகம். அவரே யாவற்றினுள்ளும் உறைந்திருக்கின்றார். உண்மையில் நாம் அனைவரும் மாறுவேடம் போடுகின்றோமேயல்லாது யாரும் புதிதாகப் பிறப்பதில்லை. நான் உன்னிடத்திலிருந்து விலகிச்சென்று விடுவேனென்று ஒருபோதும் ஏங்காதே. சாயிசாயி என ஜெபித்துக் கொண்டிருப்பவனை ஏழு கடலையும் தாண்டி சொர்க்கலோகத்துக்கு அழைத்துச் செல்வேன். என்னை அளவுக்கதிகமாக நேசிப்பவனுக்கு என்றும் காட்சி தருகின்றேன்.

நான் இறந்த பின்பும் கல்லறையிலுள்ள எனது எலும்புகள் நம்பிக்கையும் மன உறுதியும் அளிக்கும் என்பதை நம்புவாயாக. உருவமோ அருவமோ அற்ற நான் எனது பக்தனைச் சென்றடைவதற்கு எந்தவித கதவுகளும் தடையாக அமையா. இவையாவும் சீரடி சாயி பாபாவின் பொன்மொழிகளாகும். சீரடி சாயியின் சமாதிநிலைக்குப்பின், தோன்றி மறைந்தபகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவின் போதனைகளும் அதனைத்தான் எடுத்துக் கூறுகின்றன. சீரடி சாயிபாபாவின் மறு அவதாரம் தான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவாகும்.

சாயி பக்தர்களுக்கு நம்பிக்கையும், பொறுமையும் கண்டிப்பாகத் தேவை. பக்தி திடமாகவும், மனமானது இடம் விட்டு இடம் தாவாது இருத்தல்வேண்டும். சத்யசாயியும் சீரடிசாயியும் ஒருவரே! என்ற கொள்கையைஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் பகவானின் அருளும் அனுக்கிரகமும் கிட்டும். அவ தாரங்கள் சமாதிநிலையை அடைந்தாலும், அவர்கள் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

ஆனால் அவர்களது இடைவெளியை நிரப்புவதற்கு யாரையும் அவர்கள் நியமிப்பதில்லை.

1975 மே மாதம் 25 ஆம் திகதி சேவா தள மகாநாட்டில் பகவான் சத்யசாயி பாபா பேசுகையில் ஒரு சிலர் தம் வழியே சுவாமி செயற்படுவதாகவோ, சுவாமியிடமிருந்து கட்டளைகள் கிடைப்பதாகவோ கூறிக்கொண்டு சிலவேடிக்கையான தந்திரங்களைச் செய்யும்போது, நமது சேவாதள தொண்டர்கள் அங்கு சென்று அவர்களை ஊக்குவிக்கிறார்கள்.

பகவானிடம் நேரடித் தொடர்பு இருக்கும்போது இத்தகைய போலி சுவாமிகளின் தேவை எங்குள்ளது என்றும், 1965 மார்ச் 25ம் திகதி தனது அருளுரையில்,நான் இன்னொருவர் மூலம் பேசுவதில்லை, இன்னொருவர் உடலில் புகுவதில்லை,நான் பேச இன்னொருவரை ஊடகமாகப் பயன்படுத்துவதில்லை. நான் நேரில் நானாகவே வந்து உங்களுக்கு அமைதியும் ஆனந்தமும் தருவேன் என்றும் கூறினார்.

பகவானின் மகா சமாதி தினமான ஆராதனா மகோற்சவம், புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தில், பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா மத்திய (கொழும்பு) நிலையம் ஏற்பாட்டில், இன்று 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, காலை 5 மணி தொடக்கம் பகல் ஆராத்தியுடன் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

அன்றைய தினம் இடம்பெறும் மகா ரூத்ராயாகத்தில்,புட்டபர்த்தி மகாசமாயில் வைத்து பூஜித்து எடுத்துவரப்பட்ட பாபாவின் பஞ்சலோக திருவுருவத்துக்கு, பக்தர்களினால் பரிபூரண அபிஷேகம் இடம் பெறும். மாலை 6 மணிக்கு சாயி பஜன் நடைபெறும். வருகின்ற சித்ரா பௌர்ணமி அன்று 30 ஆம் திகதி இலட்சார்ச்சனை ஏற்பாடாகியுள்ளது.

– **எஸ்.டி.எஸ். உதயநாயகம்**
தலைவர் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாமத்திய (கொழும்பு) நிலையம்

> “சாயி பக்தர்களுக்கு நம்பிக்கையும், பொறுமையும் கண்டிப்பாகத் தேவை. பக்தி திடமாகவும், மனமானது இடம்விட்டு இடம்தாவாது இருத்தல் வேண்டும். சத்யசாயியும் சீரடிசாயியும் ஒருவரே! என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்போதுதான் பகவானின் அருளும் அனுக்கிரகமும் கிட்டும். அவதாரங்கள் சமாதி நிலையை அடைந்தாலும், அவர்கள் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.”

நாடாளுமன்றத்தை புனரமைக்க ரூ.100 கோடி வீண் விரயம் – அமைச்சர் சஜித்

கொழும்பு, ஏப். 24

மக்களின் பிரதிநிதிகள் 225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தை புனரமைப்புச் செய்ய ஒதுக்கப்படவுள்ள 100 கோடி ரூபாவில் வீடில்லாத 2 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுக்க முடியும் என வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியை புனரமைப்புச் செய்ய இவ்வளவு அதிகளவு நிதி ஒதுக்கப்படுவது அநாவசியமானது எனவும் மக்கள் நாடாளுமன்றத்துக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்தமை அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே அன்றி சொகுசாகக் கொண்டாடுவதற்கல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு ஒதுக்கப்படவுள்ள 100 கோடி ரூபாவும் தனது அமைச்சுக்கு வழங்கப்பட்டால், 25 வீடுகளைக் கொண்ட 80 கிராமங்களை உருவாக்க முடியும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

அச்செழு இளைஞர்கள் புவி தினத்தில் மரநடுகை!

யாழ்ப்பாணம், ஏப். 24

அச்செழு இளைஞர் கழகத்தின் ஒழுங்கமைப்பில் சர்வதேச புவித்தினத்தை முன்னிட்டு மரங்கள் நடப்பட்டன.

புவி மிக விரைவாக வெப்பமடைந்து வரும் தற்போதைய காலகட்டத்தில் மரங்களை நட்டு பராமரிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இதனடிப்படையில் சர்வதேச புவித்தினத்தை முன்னிட்டு அச்செழு இளைஞர் கழகத்தினர் நேற்றைய தினம் மரம் நடுகைச் செயற்திட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வானது அச்செழு இளைஞர் கழகத் தலைவர் ஈ.துசாந்தன் தலைமையில் அச்செழு ஞானவைரவர் அண்ணமார் ஆலய முன்றிலில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் கோப்பாய்ப் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ர.பகீரதன், அச்செழு ஞானவைரவர் அண்ணமார் ஆலயத் தலைவர் இ.புஷ்பாகரன், அச்செழு இளைஞர் கழகத்தின் ஆலோசகர்கள் ம. ஈஸ்வரன், சி.சதாநந்தன் ஆகியோரும் அச்செழு இளைஞர் கழகத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மரங்களை நட்டுவைத்தனர்.

கல்விக் கதிர் வெளியீடு

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 29

பகுதி - II

46) இலங்கைத் தேசியக் கொடியில் காணப்படும் வாளேந்திய சிங்கத்தின் நிறம்?

1.கபிலம் 2.சிவப்பு
3.மஞ்சள் 4. செம்மஞ்சள்

47) பிராணிகளின் இரத்தத்தை உணவாகக் கொள்வது?

1.பழ ஈ 2.தெள்ளு
3.உடும்பு 4.ஏபிட்டு

48) இரவில் உலவித் திரியும் விலங்கு அல்லாதது?

1.சாக்குருவி 2.ஆந்தை
3.புறா 4.நத்தை

49) காற்றில் பரவும் வித்து?

1.அச்சி 2. கத்தாப்பு
3.புலிநகம் 4.துத்திரி

50) உடற்சக்தியைப் பயன்படுத்தி இயங்கும் தரைவழிப் போக்குவரத்து சாதனம்?

1.பேருந்து 2.துவிச்சக்கர வண்டி
3.புகையிரதம் 4.கார்

30 பகுதி - I

1)

2)



3) அடைப்பில் இல்லாத உருவைத் தெரிவு செய்க?



4) 25 உடன் 15 ஐக் கூட்டிவரும் எண்ணின் அரை மடங்குடன் 7 ஐக் கூட்டி அதன் மூன்றிலொரு பங்கு எவ்வளவு?

1. 7 2. 10 3.9

5) பின்வரும் அடைப்புக்களுக்குள் உள்ள எண்களின் தொடர்பை அவதானித்து வினாக்குறியுள்ள அடைப்பினுள் வரவேண்டிய விடையின் கீழ் கோடிடுக?

7	15
3	1

19	39
9	4

?	31
7	3

1. 23 2. 8 3. 15

➢ பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?

6) அம்மாவாசை அன்று சந்திரன் முழுமையாக காணப்படும்

1. இது பெரும்பாலும் நிகழும்
2. எப்போதும் நிகழும்
3. நிச்சயமாக நிகழாது

7) நூலகத்தில் கிழக்கே பூங்கா உள்ளது. பூங்காவிற்கு தெற்கே மைதானம் உள்ளது. எனவே

1. மைதானத்திற்கு வடக்கே பூங்கா உள்ளது.
2. நூலகத்திற்கு தெற்கே மைதானம் உள்ளது.
3. மைதானத்திற்கு கிழக்கே நூலகம் உள்ளது.



நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடப் போவதில்லை
-அப்துல்கலாம்

யார் யாருக்கு எந்த உணவு பாதையைக் காட்டுங்கள்





மனம் தளராதே

மடத்தில் ஜென் துறவி ஒருவர் சீடர்களுக்கு பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது அவர் சீடர்களுக்கு துன்பம் வந்தால் தன்னம்பிக்கையுடன் மனதை தளராமல் இருக்க வேண்டும் என்ற ஒரு புத்தியை அவர்களுக்கு புகட்டுவதற்கு ஒரு சிறு கதை சொல்லி புரிய வைக்க நினைத்தார். அதனால் அவர் ஒரு எறும்பின் கதையை தன் சீடர்களுக்கு சொன்னார்.

அதாவது ஓர் எறும்பு தன் வாயில் சற்று நீளமான உணவுப் பொருளை தூக்கிச் சென்றது. அப்போது அது செல்லும் வழியில் ஓர் விரிசல் தென்பட்டது. அதனால் அந்த எறும்பு அதை தாண்டிச் செல்ல முடியாமல் தவித்தது.

சற்று நேரம் கழித்து, அந்த எறும்பு தன் உணவை அந்த விரிசல் மீது வைத்து, அதன் மீது ஊர்ந்து சென்று விரிசலைக் கடந்து, பின் தன் உணவை எடுத்துச் சென்றது என்று கூறினார்.

பின் அவர்களிடம், அதேப் போல் தான் நாமும் நமக்கு ஏற்படும் துன்பத்தையும் பாலமாக வைத்து, முன்னேற வேண்டும் என்று கூறினார்.

மேலும் அந்த சிறு எறும்பின் தன்னம்பிக்கை நமக்கு இருந்தாலே நாம் வாழ்வில் எந்த தடையையும் எளிதாக கடந்து செல்ல முடியும், துன்பமும் காணாமல் போய்விடும் என்று கூறி, அன்றைய பாடத்தை முடித்தார்.

6 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

மஹிந்த ராஜபக்ஷ கடந்த 3 வருடங்களாக தேசிய அரசை உடைக்க முயற்சிக்கின்றார்!

கொழும்பு, ஏப். 23

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த மூன்று வருடங்களாக தேசிய அரசை உடைப்பதற்கும் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பிளவை ஏற்படுத்துவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகலயில் இடம்பெற்ற புதுவருட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் மஹிந்த ராஜபக்ஷவின் கையாள்களால் திட்டமிடப்பட்ட சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயற்பட்டவர்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

அரசிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ள 16 உறுப்பினர்களுடன் இணையவுள்ள ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

என் காலில் விழுந்தவர் டிலான் பெரேரா

டிலான் பெரேரா மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் செல்லாதவர். என்னுடைய காலத்தில் காலில் விழுந்து தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் சென்றவர் டிலான் பெரேரா.

இன்று தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்ற பின்னர் வேறு யாரோ போடும் தாளத்திற்கு அவர் நடனமாடுகின்றார். ஒரு காலத்தில் என்னை மிகச்சிறந்த அரசியல் வாதி என வர்ணித்த அவர் தற்போது என்னை காலாவதியான நூடில்ஸ் என வர்ணிக்கின்றார்.

காலாவதியான நூடில்ஸ்கள் என வர்ணிக்கப்படுபவர்கள் பத்து பேர் இணைந்தால் உலகையே தலைகீழாக மாற்றிவிட முடியும் எனவும் சந்திரிகா தெரிவித்துள்ளார்.

மேலும், 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறினாலும் தேசிய அரசு தொடரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

வவு. விவசாயிகளுக்கு உபகரணங்களை மாகாண சபை உறுப்பினர் வழங்கினார்!

வவுனியா, ஏப். 23

வட மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

விவசாய திணைக்களத்தினூடாக 7 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியில் நேற்று வழங்கப்பட்ட விவசாய உபகரணத் தொகுதிகளை 50 விவசாயிகள் பெற்றுக்கொண்டனர்.

மருந்து தெளிக்கும் கருவி, நீர் இறைக்கும் இயந்திரம், முள்ளுக்கம்பி, சிமெந்து பொதிகள் உட்பட பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டதுடன் விவசாயத் திணைக்களத்தால் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-100)

சிங்கராஜா - கண்ணெலிய காட்டுப் பகுதிக்கு சமீபமாகவுள்ள பிரதேசம் அபிவிருத்தி

கொழும்பு, ஏப். 24

சிங்கராஜ மற்றும் கண்ணெலிய காட்டுப் பகுதிக்கு அருகில் உள்ள பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய ஐந்து வருடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த திட்டத்திற்கு 45 கோடி ரூபா நிதியை வனப்பாதுகாப்பு திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த வருடத்திற்காக ஆறு கோடி 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வனப்பாதுகாப்புத்திணைக்களத்தின் காலி மாவட்ட அதிகாரி மொஹான் ஹினடிகல தெரிவித்துள்ளார்.

சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் இந்த அபிவிருத்தி நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

காட்டுப் பகுதியை அண்டியுள்ள பிரதேசங்களில் குடிதண்ணீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளும் விரிவுபடுத்தப்படவுள்ளன. வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனே இருப்பார்!

அசாத் சாலி உறுதி

கொழும்பு, ஏப். 24

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனே வகிக்க வேண்டும் எனத் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வாக்கு கேட்ட யாரும் எதிர்க்கட்சித் தலைவராக முடியாது எனவும் அசாத் சாலி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு - செட்டியார் தெருவில் நேற்று முன்தினம் இரவு தமிழ் சிங்களப் புத்தாண்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்தநிகழ்வில்கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அசாத் சாலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொல்லப்பட்டமையை அடுத்து தேர்தல் முறை மாற்றப்பட்டது. தற்போது கொழும்பு மாநகர சபையில் தெரிவானவர்களுக்கு ஆசனங்கள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

லண்டனில் ஜனாதிபதி மைத்திரியுடன் இணைந்துகொண்ட தூதுக்குழுவினர் தொடர்பான தகவல்கள் பொய்யானவை!

- அரச தகவல் திணைக்களம்

கொழும்பு, ஏப். 24

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றிருந்த போது ஜனாதிபதியுடன் இணைந்துகொண்டுள்ள உத்தியோகபூர்வ தூதுக்குழுவினர் தொடர்பாக பல்வேறு பொய்யான தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதியுடன் பயணித்த உத்தியோகபூர்வ தூதுக் குழுவில் ஜனாதிபதியின் பாரியார், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ மருத்துவர், அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அவரது பாரியார், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, உரைபெயர்ப்பாளர் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் இருவர் ஆகியோரே உள்ளடக்கப்பட்டனர்.

மேலும், உத்தியோகபூர்வ தூதுக் குழுவில் உள்ளடக்கப்படாத ஜனாதிபதி ஊடகப் பிரிவின் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக செய்தியாளர்களும் அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடகவியலாளர்களும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தர்கள் சிலரும் மாத்திரமே இந்த விஜயத்தில் இணைந்து கொண்டனர்.

இதற்கு மேலதிகமாக பொது நலவாய அரசதலைவர்கள் மாநாட்டிற்கோ அல்லது அதனுடன் இணைந்ததாக இடம்பெற்ற ஏனைய கலந்துரையாடல்களுக்கோ ஜனாதிபதி செயலகத்தின் செலவில் எந்தவொரு நபரும் பயணிக்கவில்லை.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர, கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டனர், இந்தப் பொருளாதார மாநாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய எந்தவொரு தரப்பினருக்கும் ஜனாதிபதி செயலகத்தால் செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, நூற்றுக்கும் அதிகமான தூதுக்குழுவினர் ஜனாதிபதியின் தூதுக்குழுவில் இணைந்துகொண்டுள்ளனர் என ஊடகங்களில் வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்பதுடன் அவற்றை முற்றாக நிராகரிக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் வயதான ஜப்பானிய பெண் உயிரிழப்பு!

டோக்கியோ,ஏப்.24

உலகில் மிக வயதான ஜப்பானியப் பெண் 117 ஆவது வயதில் மரணம் அடைந்துள்ளார்.

ஜப்பானின் ககோஷிமா மாகாணத்துக்குட்பட்ட கிகாய் என்ற நகரில் வசித்து வந்தவர் நபி தஜிமா (வயது 117). உலகில் மிக வயது முதிர்ந்த பெண்ணான இவருக்கு கடந்த ஜன வரியில் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதனால் அவர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

1900 ஆம் ஆண்டில் பிறந்த இவர் 19 ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த கடைசி நபர் எனத் தெரிய வந்துள்ளது. அவருக்குப் பேரக் குழந்தைகள் என 160 பேர் உள்ளனர்.

ஜமைகா நாட்டைச் சேர்ந்த வயலட் பிரவுண் என்பவர் கடந்த செப்ரெம்பரில் தனது 117வது வயதில் மரணம் அடைந்த நிலையில் நபி அந்த இடத்தைப் பிடித்துள்ளார். அவர் 7 மாதங்களுக்குமுன் இந்தசாதனையை அடைந்ததற்காக நடந்த நிகழ்ச்சியில் இசைக் கருவிகளின் இசைக்கேற்ப தனது கைகளை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இவரது மறைவைத் தொடர்ந்து மற்றொரு ஜப்பானியப் பெண்ணான சியோமியாகோ உலகின் மிக வயது முதிர்ந்த பெண் என்ற இடத்தை பிடித்துள்ளார். 10 நாள்களில் 117 வயது ஆகவுள்ள சியோமியாகோ டோக்கியோ நகரின் கனகாவா பகுதியில் வசித்து வந்திருந்தார்.

சவூதி அரேபியாவில் வீதி விபத்து; மக்கா சென்ற 4 பயணிகள் பலி!

சவூதி அரேபியாவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த 4 மக்கா புனித பயணிகள் பலியாகி உள்ளனர். சவூதி அரேபியா நாட்டில் உள்ள மெக்கா நகருக்கு ஆண்டுதோறும் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் புனித பயணம் மேற்கொள்வர்.

இந்த நிலையில், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 17 பயணிகளுடன் பஸ் ஒன்று சவூதி அரேபியாவில் உள்ள மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது. சவூதியின் மேற்கு நகரான அல்கலாஸ் பகுதியருகே சென்ற பஸ் எரிபொருள் ஏற்றி வந்த லொறி ஒன்றின் மீது மோதி விபத்தில் சிக்கியது.

இதில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 4 பேர் பலியாகினர். 12 பேர் காயமடைந்தனர். இதனை இங்கிலாந்துக்கான சவூதி தூதர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தற்கொலைக் குண்டு தாக்குதல் சம்பவம்

உயிரிழந்தோர் எண்ணிக்கை 57 ஆக உயர்வு

காபூல்,ஏப்.24

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வாக்காளர் பதிவு மையத்தில் ஐ.எஸ். நடத்திய தற்கொலைக் குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 57 ஆக உயர்ந்துள்ளது.

தலிபான் பயங்கரவாதிகளின் ஆதிக்கத்தில் சிக்கியிருந்த ஆப்கானிஸ்தான் நாட்டிலிருந்து அமெரிக்க பாதுகாப்புப்படைகள் வாபஸ் பெறப்பட்ட மூன்றாண்டுகளுக்குப் பின்னர் கடந்த 2014 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் பல்வேறு முறைகேடுகள் நிகழ்ந்தன என புகார்கள் எழுந்தன. நடப்பு நாடாளுமன்றத்தின் காலம் முடிவடைவதற்குள் நியாயமான வகையில் அடுத்த தேர்தல் நடத்தப்படவேண்டும் என உள்ளூர் மக்களும் சர்வதேச அரசியல் நோக்கர்களும் வலியுறுத்தி வந்தனர்.

ஆனால், புதிய வாக்காளர்கள் கணக்கெடுப்பு மற்றும் பாதுகாப்பு நிலைவரங்களை காரணம் காட்டி அடுத்தடுத்து தேர்தல் திகதி ஒத்திவைக்கப்பட்டு வந்தது. இதற்கிடையில், ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண் டில் நடத்தி முடிக்க வேண்டியுள்ளது. இதனால், ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்படுமா? என்ற சந்தேகம் அந்நாட்டு மக்களிடையே நிலவி வந்தது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் தலைமை தேர்தல் ஆணையாளர், ஒக்ரோபர் 20 ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் என அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

இதையடுத்து, புதிய வாக்களர் சேர்க்கை மற்றும் அடையாள அட்டை வழங்கும் பணிகளில் அந்த நாட்டு தேர்தல் ஆணையம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. பல்வேறு இடங்களில் வாக்காளர் பதிவு மையங்கள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், காபூல் நகரின் தாஷ்-இ பார்சி என்ற பகுதியில் செயல்பட்டு வந்த வாக்காளர் பதிவு மையத்தில் நேற்று முன்தினம் நுழைந்த தற்கொலைக் குண்டுதாரி தனது உடலில் கட்டி வைத்திருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தார். இந்தத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 56 பேர் காயமடைந்தனர் எனவும் முதல்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.எஸ். அமைப்பு இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்றது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நிலைவரப்படி பலியானோர் எண்ணிக்கை 48 ஆக உயர்ந்தது. பலியானவர்களில் பெரும்பாலோனோர் குழந்தைகள் மற்றும் பெண்கள் என உள்துறை அமைச்சக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்த தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை நேற்று 57 ஆக அதிகரித்துள்ளது. இதில் 22 பெண்களும், 8 குழந்தைகளும் அடங்குவர். மேலும் இந்த தாக்குதலில் 119 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை மோசமாக இருக்கின்றமையால் சாவு எண் ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.



அமெரிக்க ஹோட்டலில் துப்பாக்கிச் சூடு!

3 பேர் உயிரிழப்பு

வொஷிங்டன்,ஏப்.24

அமெரிக்க ஹோட்டல் ஒன்றில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 3 பேர் பலியாகியுள்ளனர். இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு ஓடிய நிர்வாண வாலிபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

அமெரிக்காவின் டென்னிசி மாகாணத்தின் ஆன்டியோச் நகரில் உள்ள வேபிள் ஹவுஸ் என்ற ஹோட்டலுக்கு நேற்று முன்தினம் அதிகாலை வாலிபர் ஒருவர் காரில் வந்து இறங்கினார்.

தன் ஆடையை கழற்றி எறிந்து விட்டு நிர்வாணமான அவர், தான் மறைத்து வைத்து இருந்த துப்பாக்கியை வெளியே எடுத்து, அந்த ஹோட்டலில் இருந்தவர்கள் மீது சரமாரியாகச் சுட்டார்.

இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவானது. அங்கு இருந்தவர்கள் பலரும் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடினர்.

இதற்கிடையே அங்கு இருந்த ஒருவர் துணிச்சலுடன் பாய்ந்து சென்று, அவரிடம் இருந்த துப்பாக்கியை பறித்தார். அது ஏ.ஆர்- 15 ரக துப்பாக்கி ஆகும். அமெரிக்காவில் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்திய கொலையாளிகள் பலரும் இந்த ரக துப்பாக்கிகளைத் தான் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்த நபர், நிர்வாணமாக அங்கிருந்து ஓடி தலைமறைவாகியுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். சிலர் படுகாயம் அடைந்துள்ளனர் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

வடகொரியாவில் கோர விபத்து; 30 சுற்றுலாப் பயணிகள் பலி!

வடகொரியாவில் ஏற்பட்ட வீதி விபத்தில் 30 சுற்றுலாப் பயணிகள் பலியாகி உள்ளனர். வடகொரியாவில் ஹுவாங் காய் வூதியில் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று கவிழ்ந்தது. இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 30 சுற்றுலா பயணிகளே பலியாகியுள்ளனர்.

அவர்கள் சீனாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. இதுபற்றி சீன வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்தியில்-

வட கொரியாவில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் விபத்தில் சிக்கியுள்ளது இதில் பலர் பலியாகியிருக்கக் கூடும் எனத் தெரிவித்துள்ளது.

சீனாவிலுள்ள அரச தொலைக்காட்சியின் ஆங்கிலச் சேனல் ஒன்று வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், சுற்றுலா பஸ் ஒன்று பாலத்தில் இருந்து கவிழ்ந்ததில் 30 பேர் பலியாகி உள்ளனர் எனத் தெரிவித்திருந்தது. அதன்பின் அந்த செய்தி நீக்கப்பட்டு விட்டது.

வடகொரியாவில் ஆண்டுக்கு 4.4 கோடி அமெரிக்க டொலர் அளவுக்கு சுற்றுலாவால் வருவாய் கிடைக்கிறது என தென்கொரியாவில் உள்ள அமைப்பு ஒன்று தகவல் தெரிவிக்கின்றது. வடகொரியாவில் சுற்றுலா மேற்கொள்ளும் வெளிநாட்டவர்களில் 80 சதவீதத்தினர் சீனாவைச் சேர்ந்தவர்கள் என்றும் அது தெரிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காவிரி மேலாண்மை சபை அமைக்க வலியுறுத்தி தி.மு.க. நேற்றுமுன்தினம் மனிதச் சங்கிலிப் போராட்டம்!

காவிரி மேலாண்மை சபை அமைக்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் நேற்றுமுன் தினம் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தினர்.

காவிரிப் பிரச்சினை தொடர்பான வழக்கில், மார்ச் மாதம் 29 ஆம் திகதிக்குள் காவிரி மேலாண்மை சபையை மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால், குறிப்பிட்ட காலத்துக்குள் மத்திய அரசு காவிரி மேலாண்மை சபையை அமைக்காததால் தமிழக அளவில் எதிர்ப்புகள் வலுத்தன.

கர்நாடக சட்டமன்ற தேர்தலை மனதில் வைத்தே மத்திய பா.ஜ.க. அரசு காவிரி மேலாண்மை சபையை அமைக்க மறுக்கிறது என இங்குள்ள அரசியல் கட்சிகளும், விவசாய அமைப்புகளும் குற்றம்சாட்டத் தொடங்கின. தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க.வும் இம்மாதம் முதலாம் திகதி முதல் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

கடந்த 5 ஆம் திகதி தமிழகம் முழுவதும் முழு அடைப்பு போராட்டம் நடத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து, தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கடந்த 7 ஆம் திகதி காவிரி மீட்பு பயணத்தை தொடங்கினார்.

திருச்சி முக்கொம்பில் தொடங்கிய இந்த பயணம் 12 ஆம் திகதி கடலூரில் நிறைவடைந்தது. அன்றைய தினம் சென்னை வந்த பிரதமர் நரேந்திரமோடிக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

13 ஆம் திகதி கூட்டணி கட்சி தலைவர்களுடன் மு.க.ஸ்டாலின் சென்று கவர்னர் பன்வாரிலால் புரோகித்தை சந்தித்தார். அப்போது, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி, காவிரி மேலாண்மை சபையை உடனே அமைக்க மத்திய அரசை வலியுறுத்தவும், பிரதமரை சந்தித்து முறையிட அனுமதி பெற்றுத்தரவும் கவர்னரிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கடந்த 16 ஆம் திகதி மு.க.ஸ்டாலின் தலைமையில் கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, நேற்றுமுன்தினம் தமிழகம் முழுவதும் மாவட்டத்தலைநகரங்களில் மனிதச்சங்கிலிப் போராட்டம் நடை பெற்றது. மாலை 4 மணி முதல் 5 மணி வரை ஒரு மணி நேரம் இந்த மனிதச் சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டையில் நடைபெறும் மனிதச் சங்கிலி போராட்டத்தில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டா லின் கலந்து கொள்கிறார். சென்னையில் நடைபெறும் போராட்டத்தில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழகம் முழுவதும் நடைபெறும் இந்த மனிதச் சங்கிலி போராட்டத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

குஜராத் கடலில் சரக்கு கப்பலில்

விஷ வாயு தாக்கி சீனர் இருவர் பலி

ஜாம்நகர், ஏப்.24

சரக்கு கப்பலில் விஷ வாயு தாக்கி சீனாவைச் சேர்ந்த 2 பேர் உயிரிழந்த சம்பவம் குஜராத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹொங்கொங்கைச் சேர்ந்த சரக்குக் கப்பல் ஒன்று சிங்கப்பூரில் இருந்து நிலக்கரியை ஏற்றிக்கொண்டு குஜராத்திலுள்ள நவ்லகி துறைமுகத்துக்கு வந்து கொண்டிருந்தது. இதில் சீனர்கள் உட்படப் பல பணியாளர்கள் இருந்தனர்.

இந்தக் கப்பல் குஜராத்தின் ஜாம்நகரில் உள்ள ரோசி துறைமுகம் அருகே நேற்று முன்தினம் சென்றபோது கப்பலில் விஷ வாயு கசிந்தது. இதை சுவாசித்த 3 சீனர்கள் மயங்கி விழுந்துள்ளனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த சக ஊழியர்கள், அவர்களை மீட்டுக் கரைக்குக் கொண்டுசென்றுள்ளனர். பின்னர் அவர்கள் 3 பேரும் ஜாம் நகரில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களைப் பரிசோதித்த டொக்டர்கள், 2 பேர் ஏற்கனவே இறந்து விட்டனர் எனத் தெரிவித்துள்ளார். மற்றொருவருக்கு அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய ஜூடோ சம்பியன்ஷிப்பில்

10 தங்கங்களுடன் இந்தியா முதலிடம்!

காத்மண்டு, ஏப்.24

நேபாளத்தில் நடைபெற்றுவரும் தெற்காசிய ஜூடோ சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 10 தங்கப் பதக்கங்கள் வென்று முதலிடம் பிடித்துள்ளது.

தெற்காசிய ஜூடோ சம்பியன்ஷிப் போட்டிகள் நேபாளத்தின் காத்மண்டு நகரில் கடந்த 21 ஆம் திகதி தொடங்கியது. இந்தப் போட்டியில் இந்தியா சார்பில் கலந்துகொண்டவர்கள் பல பதக்கங்களை வென்றுள்ளனர்.

இரண்டு நாள்கள் நடைபெற்று முடிந்த போட்டிகளில் இந்தியா 10 தங்கப்பதக்கங்கள் வென்றுள்ளது.

காளான் சாப்பிட்டு 4 பேர் உயிரிழப்பு!

மேற்கு வங்க மாநிலத்தின் கலிம்போங் பகுதியில் காட்டு காளான் உட்கொண்ட இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்க மாநிலம் கலிம்போங் பகுதியைச் சேர்ந்தவர் அண்டிம் ராய் என்பவர் கடந்த வியாழக்கிழமை காட்டுப் பகுதியில் இருந்து சில காளான் வகைச் செடிகளைப் பறித்து வந்துள்ளார். அதை அவரது குடும்பத்தினர் மற்றும் பக்கத்து வீட்டினர் உடன் சேர்ந்து சமைத்து சாப்பிட்டுள்ளனர்.

சாப்பிட்ட சிறிது நேரத்தில் அவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட ஏழு பேரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி ஒருவர் சம்பவம் நடந்த அன்று இரவே மரணமடைந்துள்ளார்.

இந்த நிலையில், இந்தச் சம்பவத்தில் இரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓடும் பஸ்ஸில் சிறுமியிடம் சில்மிஷம்!

தமிழகத்தின் திருவனந்தபுரம் அருகே ஓடும் பஸ்ஸில் சிறுமியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்ட முதியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். திருவனந்தபுரத்திலிருந்து பம்பைக்கு சென்ற பஸ்ஸில் சிறுமி ஒருவர் பெற்றோருடன் பயணம் செய்தார்.

சிறுமியின் அருகே திருவனந்தபுரம் நாலாஞ்சிறா பகுதியைச் சேர்ந்த ராஜன் (வயது 61) என்பவரும் இருந்தார். அவர் சிறுமியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டார். இது பற்றி சிறுமி, பெற்றோரிடம் கூறினார்.

அதிர்ச்சி அடைந்த பெற்றோர் இந்தச் சம்பவம் பற்றி திருவனந்தபுரம் பொலிஸில் புகார் செய்தனர்.

பொலிஸார் சம்பவம் பற்றி விசாரணை நடத்தினர். இதில் முதியவர் ராஜன் சிறுமியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டது உண்மை எனத் தெரியவந்தது. இதையடுத்து ராஜனை பொலிஸார் கைது செய்தனர்.

தமிழகத்துக்கு எதிரான கூட்டுச்சதியில்

அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் இரட்டைக்குழல் துப்பாக்கி

சென்னை, ஏப். 24

தமிழகத்துக்கு எதிரான கூட்டுச்சதிகளில் அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயற்படுகின்றது என தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

தி.மு.க. செயல் தலை வர் மு.க.ஸ்டாலின் நேற்று புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட காமராஜபுரம் பகுதியில் பொது மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

இதையடுத்து, அவர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்தார்.

அப்போது அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அ.தி.முகவும், பா.ஜ.கவும் இரட்டை குழல் துப்பாக்கியாகச் செயற்படுவது நூற்றுக்குநூறு சதவிகிதம் உண்மை தான்.

ஆனால், எந்த வகையில் என்றால், இரட்டை குழல் துப்பாக்கியாகச் செயற்படுவது. ஏழை -எளிய கிராமப்புற மக்கள் மருத்துவக் கல்வியைப் பெறமுடியாத வகையில் நீட்தேர்வை கொண்டு வந்ததில் இரட்டை குழல் துப்பாக்கியாகச் செயற்பட்டு இருக்கின்றனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகும் அதை அமைக்க முடியாது என மத்திய அரசு பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு துணையாக இருந்து தமிழக அரசு இரட்டை குழல் துப்பாக்கியாகச் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறது.

தமிழக அரசு செய்யும் கொள்ளைகளுக்கு, ஊழல்களுக்கு, மத்திய அரசு துணையாக இருந்து இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயற்படுகிறது.

வருமான வரித்துறை சோதனைகள் நடந்து முடிந்தும். ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, பா.ஜ.கவும், அ.தி.மு.கவும் சேர்ந்து கூட்டுச் சதியை இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் சேர்ந்து செய்திருக்கின்றனர்.

காவிரி மேலாண்மை சபை அமைக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவது ஒரு

மு.க. ஸ்டாலின் விமர்சனம்

நாடகம். முதலமைச்சர் தலைமையில் அனைத்து கட்சிகளின் தலைவர்களையும், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளையும் டில்லிக்கு அழைத்துச் சென்று பிரதமரை சந்தித்து, காவிரி மேலாண்மை சபை அமைக்க வலியுறுத்துவதாக, அனைத்து கட்சி கூட்டம் நடத்தி நிறைவேற்றிய தீர்மானம் என்னவானது? அதை தமிழக அரசு வலியுறுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் அங்கு பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. இதனையடுத்து வவுனியா வளாகத்தைக் காலவரையறையின்றி மூடியது பல்கலைக்கழக நிர்வாகம்.

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பம்பைமடுவில் அமைந்துள்ள வியாபாரக் கற்கைகள் பீடத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள், அங்கு புத்தர் சிலை ஒன்றை வைப்பதற்காக அதற்கான கூடு ஒன்றை நேற்று அமைத்தனர். பல்கலைக்கழகத்தின் அனுமதி பெறாது மாணவர்கள் மேற்கொண்ட இந்த முயற்சியைப் பல்கலைக்கழக நிர்வாகம் உடன் தடுத்து நிறுத்தியது.

இதன்போது சிங்கள மாணவர்களால் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அத்துடன் சிங்கள மாணவர்கள் புத்தர் சிலை வைப்பதற்காகக் கொண்டுவந்த கூட்டை அங்கிருந்து எடுத்துச் சென்றனர்.

இதனையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டதுடன் சிங்கள மாணவர்கள் பார்க் வீதியில் அமைந்துள்ள வளாகத்தின் அலுவலகத்தை முற்றையிட்டனர். இதனால் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டனர். வவுனியா வளாகமும் காலவரையறையின்றி மூடப்பட்டது.

இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேட்டபோது,

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைச் சேர்ந்த சிங்கள மாணவர்கள் சிலர் அனுமதியின்றிப் பம்பைமடுவில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் புத்தர் சிலை ஒன்றை வைக்க முயன்றனர். அங்கு நான்கு மதத்தவர்களும் வழிபாடு செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் பல்கலைக்கழக அனுமதி பெறாது ஒரு இடத்தில் புத்தர் சிலைவைக்கஎடுத்தமுயற்சி மாணவர்கள் மத்தியில் குழப்பத்தைத் தோற்றுவிக்கக் கூடியதாக இருந்தது. அதனைத் தடுத்தோம். இதன்போது மாணவர்களால் எமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இருப்பினும் சட்டமுரணாக மாணவர்கள் மேற்கொண்ட முயற்சி தடுக்கப்பட்டது. அங்கு ஏற்பட்ட பதற்ற நிலையையடுத்து வளாகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களையும் வெளியேறுமாறு பணித்துள்ளோம் எனத் தெரிவித்தனர். (ஜ-100)

சீனாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரிவித்த அவர், இலங்கையைக் தனது கட்டுக்குள் கொண்டுவர அது முயற்சிக்கின்றதெனவும் கூறினார்.

மல்வத்தை, அஸ்கிரிய மநா நாயக்கர்களை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் எந்தக் கட்சிக்கும் நிலையான கொள்கையில்லை. தனியாட்சி மேற்கொள்வதா என்று ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை.

புதிய அமைச்சரவையில் எவ்வாறான மாற்றங்கள் வரும் என்று ஜனாதிபதி இன்னும் முடிவு செய்யவில்லை. – என்றார். (ஜ)

3 வீடுகளுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் இருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மட்டுவில் வளர்மதிப் பகுதியில் வசிக்கும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் கிராம சேவகரின் வீட்டுக்குள் வாள் மற்றும் கோடரி போன்ற ஆயுதங்களுடன் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் நுழைந்த 6 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றது.

இந்தத்தாக்குதல்தொடர்பாக நேற்று முன்தினம் இரவு உடனடியாகவே கிராம சேவகரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டும் நேற்று மதியம் 12 மணி வரைக்கும் சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வருகை தரவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டது.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோருக்குக் கிராம சேவகர் சம்பவம் தொடர்பில் தெரிவித்துள்ளார். உடனடியாகக் கிராம சேவகரின் வீட்டுக்குச் சென்ற மாகாண சபை உறுப்பினர் நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் தென்மராட்சிப் பகுதிக்கான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை நேரடியாகச் சந்தித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். இதனையடுத்து உடனடியாகச் சம்பவ இடங்களுக்குச் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

ரவுடிக் கும்பலின் அடாவடிகள் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:–

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கிராம சேவகரின் வீட்டுக் கேற்றைக் கோடரியால் கொத்திப் பிரித்து வீட்டு வளவுக்குள் நுழைந்த கும்பல், ஜன்னல் கண்ணாடிகளை உடைத்ததோடு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 மோட்டார் சைக்கிள்களையும் அடித்து சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

பின்னர் நேற்று அதிகாலை 5 மணியளவில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாகக் கட்டுக்காணி ஒழுங்கையில் உள்ள வீட்டுக் கேற்றையும் கோடரியால் பிரித்து உள் நுழைந்த கும்பல் வீட்டுக் கதவையும் கொத்தி வீட்டுக்குள் நுழைந்து தொலைக்காட்சிப் பெட்டி உட்பட பெறுமதியான வீட்டுத் தளபாடங்கையும் அடித்து நொருக்கியது.

அந்த வீட்டின் முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் அடித்துச் சேதப்படுத்திய கும்பல், அங்கிருந்து செல்லும்போது வீட்டின் மீது பெற்றோல் குண்டையும் வீசி விட்டுத் தப்பித்தது.

இதனால் சமையலறையில் தீப்பிடித்தது. இதன் பின்னர் அதிகாலை 5.30 மணிக்கு மீண்டும் மட்டுவில் வளர்மதிப் பகுதிக்குச் சென்ற அந்தக் கும்பல், கிராம சேவகரின் அயல் வீட்டுக்குள்ளும் நுழைந்து அதேபோன்றே சொத்துக்களை அடித்து நொருக்கி களேபரத்தில் ஈடுபட்டு விட்டுத் தப்பிச் சென்றது.

இந்த ரவுடிக்கும்பலின் தாக்குதல்களில் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்த மூன்று தாக்குதல் சம்பவங்களையும் ஒரு கும்பலே மேற்கொண்டிருக்கின்றது எனத் தெரிவிக்கும் சாவகச்சேரிப் பொலிஸார், சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரை நேற்றுக் காலை கைது செய்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

மாணவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸின் சாரதி, நடத்துநர் ஆகியோரே தாக்குதல் நடத்தி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் தனியார் பஸ்ஸும் வீதியில் போட்டி போட்டு மிக வேகமாகப் பயணித்தவேளை, வீதியால் மாணவிகளுடன் வந்த மாணவன் என்ன என்று ஓடுறாய் ? என இ.போ.ச. சாரதியிடம் கேட்டுள்ளார். இதன்போது சாரதி மாணவனுக்குத் திரும்பப் பேசியுள்ளார். மாணவனும் பதிலுக்குப் பேச வாய்த் தர்க்கம் முற்றியதை அடுத்து சாரதி , நடத்துநர் மற்றுமொரு நபர் ஆகியோர் இணைந்து மாணவனை தடி மற்றும் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளனர்.

அதனை அடுத்து அந்த இடத்தில் நின்றவர்கள் மற்றும் பஸ்ஸில் இருந்தவர்கள் மாணவனைத் தாக்குதலில் இருந்து காப்பாற்றியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய பஸ் சாரதி, நடத்துநர் ஆகியோர் மது போதையில் இருந்தனர் எனக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

பஸ் சாரதி மற்றும் நடத்துநர் அந்த மாணவர் திருடினார் என குற்றஞ்சாட்டுகின்றார்கள். ஆனால் மாணவன் திருடவில்லை எனவும் சாரதிக்குப் பேசியதால்தான் மாணவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பஸ்ஸில் பயணித்தவர்கள் தெரிவித்தனர். (ஜ)

நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது கூடும் நேரம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நேற்றைய வர்த்தமானியில் அந்தத் தவறு திருத்தப்பட்டு நேரம் குறிப்பிடப்பட்டது.

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரதைப் பயன்படுத்தி நாடளுமன்ற அமர்வைக் கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு முதல் எதிர்வரும் மே 8ஆம் திகதிவரை ஒத்தி வைத்தார்.

இதனால் கடந்த 19ஆம் திகதி நடைபெறவிருந்த நாடாளுமன்ற அமர்வு ஜனாதிபதியால் முடக்கப்பட்டது. நாடாளுமன்ற ஒழுங்கு விதிகளின்படி சமர்ப்பிக்கப்பட்டிருந்த சட்ட வரைவுகள், சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைகள் அனைத்தும் செல்லுபடியற்றதாகின.

இந்த நிலையில் ஜனாதிபதியால் அடுத்த சபை அமர்வுக்கான அழைப்பு வர்த்தமானி ஊடாக விடுக்கப்பட்டது. ஆயினும் அதற்கான நேரம் குறிப்பிடப்படவில்லை. இதனால் நேற்று வெளியிடப்பட்ட வர்த்தமானியில் நேரம் குறிப்பிடப்பட்டது. அன்றைய தினம் செல்லுபடியற்றுப்போன சட்டவரைவுகள் மற்றும் பிரேரணைகள் மீள சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அத்துடன் அரசின் தலைவர் என்ற அடிப்படையில் மே 8ஆம் திகதி சபை அமர்வைக் கொள்கை விளக்க உரையுடன் ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார். (ஜ)

யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குப் புறம்பானவை என யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

"யாழ். மாநகர சுகாதாரத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் நான் எடுக்க மாட்டேன். அத்தோடு இந்த விடயத்தைச் செய்வதாயின் சபையின் ஒப்புதல் பெறப்படவேண்டும். தன்னிச்சையாக என்னால் செய்யக் கூடிய விடயம் இதுவல்ல. எனவே இந்தச் செய்தி முற்றிலும் தவறானது" என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர முதல்வரின் அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பொன்றை அவர் நேற்றுக் காலை நடத்தினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈ.பி.டி.பியுடன் ஆதரவோடு யாழ்ப்பாண மாநகர சபையில் ஆட்சியமைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, யாழ். மாநகரை எழில்மிக்க மாநகராக்குவோம் என்று கூறிக் கொண்டு, இங்குள்ள ஊழியர்கள் வெளியாள்கள் செய்வதைப் போன்று செய்யமாட்டார்கள் என்பதற்காகச் சிங்கள ஊழியர்களை வேலைக்கு அமர்த்த உள்ளனர் என்று பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

இந்தச் செய்தி எனக்கு அதிர்ச்சி ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான கலந்துரையாடல்கள் எனது மட்டத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன், இந்தச்செய்தி தொழிலாளர் தொழிற் சங்கத்தின் ஊடாக வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அவர்கள் மறுப்பை வெளியிடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

நான் பதவியேற்ற நாள் முதல் சுகாதாரத் தொழிலாளர்களுடன் சிறந்த உறவுகளைப் பேணி வருகின்றேன். அவர்களின் தொழில் சார்ந்த விடயங்கள் – அவர்களை எவ்வாறு அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வது – அவர்களைத் தொழில்சார் ரீதியாக எவ்வாறு மாற்றியமைக்க முடியும் உள்ளிட்ட விடயங்களில் அக்கறை செலுத்தி வருகின்றேன்.

தற்போது கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளிகள் அனைவரும் எமது ஆட்சிக் காலம் நிறைவடையும்போது, வளர்த்தவர்களாக தோற்றமளிப்பீர்கள் என்ற உறுதிமொழியைத் தொழில் சங்கத்துக்கு வழங்கியுள்ளேன். – என்றார். (ஜ)

நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் இரண்டு வார கால விடுமுறையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு அவர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார். அவர் விடுமுறையில் இருந்த காலத்தில் வடக்கு மாகாணப் பதில் முதலமைச்சராக மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் பணியாற்றியிருந்தார்.

இந்நிலையில், வடக்கு முதலமைச்சர் நேற்றுத் தனது இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பினார் எனத் தெரியவந்தது. (ஜ)

சிவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தின் 64ஆவது படைப்பிரிவினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என அந்தக் காணியின் உரிமையாளர் கந்தையா சிவராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நான் கற்சிலைமடுப் பகுதியில் பரம்பரையாக வசித்து வருகின்றேன். 1921ஆம் ஆண்டில் எழுதப்பட்ட உறுதிக்காணியை 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவம் கைப்பற்றி இராணுவ முகாமை அமைத்துள்ளது. எனது காணிக்குள் மிகவும் பழமை வாய்ந்த சிவன் ஆலயம் ஒன்று அமைந்திருந்தது. அந்தச் சிவன் ஆலயத்தை உடைத்துத் தரைமட்டமாக்கிய இராணுவம், அதில் ஆலயம் இருந்தமைக்கான தடயங்களையும் இல்லாமல் செய்துள்ளது.

அப்பகுதியில் காணப்பட்ட வெள்ளரசு மரத்தடியில் பௌத்த விகாரையை அவர்கள் அமைத்துள்ளனர். 2009ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட அப்பகுதியைச் சுற்றி 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. எனினும் கடந்த 2013ஆம் ஆண்டு இந்தப் பகுதி தொல்பொருள் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதே வருடம் ஜுன் மாதம் வர்த்தமானியில் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான பகுதியாக எனது காணி அறிவிக்கப்பட்டது.

தற்போது ஒட்டுசுட்டான் – புதுக்குடியிருப்பு செல்லும் வீதியிலுள்ள 64ஆவது படைப்பிரிவு நிறைய மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. பழமை வாய்ந்த புராதன கற்களை எடுத்து வந்து புத்தர் சிலையை முகாமின் முன்பக்கத்தில் நிறுவி அப்பகுதியில் திட்டமிடப்பட்டு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாகத் தொல்பொருள் திணைக்களத்திடம் வினவியபோது, அது தமக்குரிய பகுதி எனவும், வேறு எவரையும் அப்பகுதிக்குள் அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தனர்.

கடந்த 1921ஆம் ஆண்டு அந்தக் காணிக்கு உறுதி எழுதப்பட்டுள்ளது. 1960ஆம் ஆண்டு எழுதப்பட்ட வரைபடத்தில் இந்து ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனப் பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், இந்து கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் தெரிவித்துள்ளனர். தொல்பொருள் திணைக்களம் இவ்வளவு காலமாக ஏன் இவற்றைக் கண்டுபிடிக்கவில்லை.

இது தொடர்பாகக் கடந்த 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. – என்றார்.

இது தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி லீனஸ் வசந்தராசாவிடம் கேட்டபோது, இராணுவம், தொல்பொருள் திணைக்களத் தரப்பினரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. – என்றார். (ஜ)

கிரிக்கெட் சபை தேர்தலில் முன்னாள் தலைவர் போட்டி

இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர், அனா புஞ்சிஹேவா எதிர்வரும் மே 9ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை கிரிக்கெட் சபைத் தேர்தலில் போட்டியிடுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1996ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய சமயத்தில், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக அனா புஞ்சிஹேவா செயற்பட்டிருந்தார்.

எனினும் அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலில் திலங்க சுமத்திபாலவிடம் தோல்வியடைந்த அனா, கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் ஏற்

பட்ட அதிருப்தி காரணமாக கொல்ப் விளையாட்டில் ஆர்வம் காட்டினார்.

எனினும் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள கிரிக்கெட் நிறுவனத் தேர்தலில் போட்டியிடுமாறு பல்வேறு தரப்பினரும் அனா புஞ்சிஹேவாவுக்கு அறிவுறுத்தல் வழங்கி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இதுத் தொடர்பில் தாம் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லையென அனா புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டெட்

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான, விலகல் முறையிலான கால்பந்தாட்ட சங்கக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு, பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸை வென்றே இறுதிப் போட்டிக்கு மன்செஸ்டர் யுனைட் டெட் தகுதிபெற்றுள்ளது.

இப்போட்டியை வேகமாக ஆரம்பித்த டொட் டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸ், தமது அணியின் கிறிஸ்டியன் எரிக்சனின் உதையை அவரின் சக வீரர் டெலே அல்லி போட்டியின் 11ஆவது நிமிடத்திலேயே கோலாக்க ஆரம்பத்திலேயே முன்னிலை பெற்றது.

எனினும் மன்செஸ்டர் யுனைட்டெட்டின் போல் பொக்பா கொடுத்த பந்தை, போட்டியின் 24 ஆவது நிமிடத்தில் அவரது சக வீரர் அலெக்ஸிஸ் சந்தேஸ் முட்டிக் கோலாக்க கோல் எண்ணிக் கையை மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.

இந்நிலையில், முதற்பாதி முடிவடையும் தருணத்தில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸின் எரிக் டயர் கோல் கம்பத்தை நோக்கி உதைந்த பந்தொன்று, மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பின்கள வீரர் கிறிஸ் ஸ்மோலிங்கில் பட்டு கோல் கம்பத்தில் பட்டுத் திரும்ப, 1–1 என்ற கோல் கணக்கிலேயே முதற்பாதி முடிவடைந்தது.

பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில், போட்டியின் 62ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர்யுனைட்டெட்டின் அன்டர்ஹெரேரா பெற்ற கோலோடு, போட்டியின் இறுதியில் 2–1 என்ற கோல் கணக்கில் வென்ற மன்செஸ்டர் யுனைட்டெட், 20ஆவது தடவையாக உதைபந்தாட்டச் சங்கக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுக் கொண்டது.

தடைக்கு பின்னர் வீடு கட்டும் வோர்னர்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரர் டேவிட் வோர்னர், பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தனது கனவு வீட்டைக் கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

கடந்த மார்ச் மாதம், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. அந்த தொடரின் இரண்டாவது போட்டியில், ஆஸ்திரேலிய அணியின் இளம் வீரர் பேன்கிராப்ட் பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கினார்.

அவருடன் அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித், டேவிட் வோர்னரும் சிக்கினர். அதனைத் தொடர்ந்து, அவர்களில் ஸ்மித் மற்றும் வோர்னருக்கு ஒரு வருடமும், பேன்கிராப்ட்டுக்கு ஒன்பது மாதங்களும் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

மேலும், ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடவும் அவர்களால் முடியாமல் போனது. இந்நிலையில், டேவிட் வோர்னர் சிட்னி கடற்கரைக்கு அருகே உள்ள கழிமுகப் பகுதியில், தனது கனவு வீட்டை பிரமாண்டமாகக் கட்டி வருகிறார்.

இது தொடர்பாக, வோர்னரின் மனைவி கேண்டிஸ் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், பாதுகாப்புத் தொப்பியை அணிந்து கொண்டு ஒரு தொழிலாளி போல வோர்னர் கட்டட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த வீடியோ 'நாங்கள் கனவு வீட்டைக் கட்டி வருகிறோம்' என்ற பெயருடன் வெளியிடப்பட்டுள்ளது. வோர்னர் வீடு கட்டி வரும் சிட்னி கடற்கரைப் பகுதி மிகவும் விலை உயர்ந்த பகுதியாகும்.

வோர்னர் தற்போது தனது குடும்பத்தினருடன் மவுரபா பகுதியில் வசித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

டோனியின் ரசிகையால் கடுப்பானார் மனைவி

டோனி தான் எப்போதும் எனது முதல் காதலர் என அவரின் தீவிர ரசிகை போஸ்டரில் எழுதிய விடயம் டோனியின் மனைவி சாக்ஷியை கடுப்பேற்றியுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் சென்னை – ராஜஸ்தான் அணிகளுக்கிடையேயான போட்டி புனே மைதானத்தில் 4 நாட்களுக்கு முன்னர் நடந்தது.

இந்தப் போட்டியின் போது சென்னை ரசிகை ஒருவர் டோனியிடம் காதலை வெளிப்படுத்தும் விதமாக ஒரு குறிப்பு மட்டையில், என் வருங் கால கணவர் என்னை மன்னிக்கவும். டோனி தான் எப்போதும் எனது முதல் காதலர். ஐ லவ் யூ டோனி என்ற போஸ்டரை காட்டினார்.

அந்தப் பெண் ரசிகையின் போஸ்டரை ஐ.சி.சி. தனது அதிகாரபூர்வமான டுவிட்டர் பக்கத்தில் டுவிட் செய்தது. இந்நிலையில் இந்த விடயம் டோனியின் மனைவி சாக்ஷியை கடுப்பேற்றியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

2019 உலகக் கிண்ணத்துக்கு பின்னர் யுவராஜ் ஓய்வு!

2019 உலகக் கிண்ணப் போட்டிக்குப் பிறகு ஓய்வு குறித்து அறிவிப்பேன் என பிரபல கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு:

2019 வரை கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பேன். 2019 இற்குப் பிறகு என் முடிவை அறிவிப்பேன். கடந்த 2000ஆம் ஆண்டு முதல் இந்திய அணிக்காகக் கிரிக்கெட் விளையாடி வருகிறேன். 17–18 வருடங்கள் ஆகிவிட்டன. எனவே நிச்சயம் 2019 இக்குப் பிறகு ஓய்வு குறித்து அறிவிப்பேன் என்று கூறியுள்ளார். இதையடுத்து 2019 உலகக் கோப்பைக்குப் பிறகு யுவராஜ் சிங் ஓய்வு பெறுவது உறுதியாகிவிட்டது.

இந்திய அணிக்காகக் கடைசியாக 2017 ஜூன் மாதம் விளையாடினார் யுவராஜ். தற்போதைய ஐ.பி.எல். போட்டியில் அவர் பஞ்சாப் அணிக்காக விளையாடிவருகிறார். இதுவரை விளையாடிய 5 ஆட்டங்களில் மொத்தமாக 36 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார்.

Mumbai Indians v Sunrisers Hyderabad
இன்று 24.04.2018 இரவு 8.00 மணி

மகாவலி வலயத்தினால் தமிழருக்கு என்ன பயன்?

கேட்கிறார் வடக்கு விவசாய அமைச்சர்

முல்லைத்தீவு, ஏப்ரல் 24

ஒரு தமிழ் மகனாவது தனது நிலத்தில் மகாவலி நீரைப் பயன்படுத்தி எந்தத் தொழிலும் செய்யவில்லை. ஆனால் மகாவலி வலயம் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

- இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் வடக்கு விவசாய அமைச்சர் கந்தையா சிவனேசன்.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம், மத்திய விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்தும் 'ஒன்றாய் எழுவோம் சிறுபோகத்தைவெல்வோம்' என்ற தலைப்பிலான விவசாய விசேட ஊக்கிவிப்பு திட்டத்தின் தொடக்க நிகழ்வு ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை:-

விவசாயத் திட்டங்களை என்பது தனித்து மாகாண அரசு என்று இல்லாமல் மத்திய அரசும் மாகாண அரசும் இணைந்து நடத்துவதன் மூலம் மக்களுக்குப் பயனாக இருக்கும்.

காலநிலை மாற்றத்தால் இன்று விவசாயிகள் பல்வேறுபிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளார்கள். அன்று ஒரு கால நிலைச் சமநிலை இருந்து வந்தது. இன்றுஅதற்கு மாறானகால நிலைஉள்ளது.

இந்நிலையில்தான் காலநிலைக்கு ஏற்ப விவசாயிகளை மாற்ற வேண்டியநிலைஉள்ளது. இவற்றுக்கு அமைவாகவே திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சோலைவனமாக இருந்த பிரதேசங்கள் எல்லாம் பாலைவனமாக மாறி வருகின்றன. இது கூட காலநிலை மாற்றத்தைஏற்படுத்துகின்றது.

வவுனியாவில் மழை பெய்து சிறுகுளம் கூட வான் பாய்ந்திருக்கிறது. ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை இல்லை. முத்துஐயன் கட்டுக்குளத்தில்நீர்இல்லை. இதனை நம்பி வாழ்கின்ற ஆயிரக்கணக்கான மக்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொதுவான காலநிலை மாற்றத்தால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனைச் சீர்செய்ய மக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். பரந்தன் போன்ற இடங்களில் நின்று பார்ப்பீர்களாக இருந்தால் பாரஊர்தியில் மரங்கள் போய்க் கொண்டே இருக்கின்றன. சில வீடுகளில் கேட்டால் குரங்கின் தொல்லை தாங்கமுடியவில்லை, மரத்தைத் தறித்து கொடுத்துவிட்டேன் என்று சொல்கின்றார்கள்.

என்னைப் பொறுத்த மட்டில் நீங்கள் நூறு குரங்குகளைக் கொல்லலாம். ஆனால்நூறுஆண்டுகள் வாழும் ஒருமரத்தைக் கொல்வது மிகமோசமான குற்றம். இவ்வாறு நாங்கள் செய்யும் பல தவறுகளைத் திருத்திக் கொள்ளவேண்டும்.

வடக்குக்கு மகாவலி நீரைக் கொண்டுவருவேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கள மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் அமைச்சராக இருந்தபோதுசொன்னார். ஆனால் இன்றுவரை நீர் வரவில்லை. இன்று ஒரு தமிழ் மகனாவது தனது நிலத்தில் மகாவலி நீரைப் பயன்படுத்தி எந்தத் தொழிலும் செய்யவில்லை. ஆனால்மகாவலிவலயம் தமிழ்மக்கள் மத்தியில் இருக்கின்றது. இந்த மகாவலித் திட்டத்தை மாகாண அரசு கையாள்வதாக இருந்தால் அது மக்களுக்குத் திருப்தியாக இருக்கும். மத்திய அரசு கையாள்வதால் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின்பணிப்பாளர்களுக்கு நாங்கள் விநயமாக ஒரு கோரிக்கை விடுக்கிறோம். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் நீங்கள் நீரை வழங்குங்கள். பிரதேசத்தை வளப்படுத்துங்கள். ஆனால் பிரதேசத்துக்குச் சம்பந்தம் இல்லாத மக்களைக் கொண்டுவந்து குடியேற்றுவதை நிறுத்தவேண்டும். இந்தக் குடியேற்றத்திற்கு நாங்கள் ஒப்புதல் அளிக்கமாட்டோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்முகாமைத்துவத்தைச் சரியான முறையில் செயற்படுத்துவோமாக இருந்தால் மகாவலி நீர் தேவையில்லை. ஆயிரக்கணக்கான சிறிய குளங்கள் இன்னும் மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யப்படவில்லை. அவை தூர்ந்துபோய் இருக்கின்றன. பல குளங்கள் வன இலாகா வினால் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களுக்குள் இருக்கின்றன.

இவற்றை எல்லாம் சரியான முறையில் செயற்படுத்துவோமாக இருந்தால் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வேறு இடத்தில் இருந்து வருகின்ற நீர் தேவையில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திபொருள்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு கிடைக்குமாக இருந்தால் மட்டுமே விவசாயிகள் நன்மையடைவார்கள். - என்றார். (ஐ)

யாழ்.இந்துக் கல்லூரியின் அதிபர் சதா நிமலன் 2015 நவம்பர் முதல் இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றுக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான சான்றுப் பத்திரம் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரிய வாசத்தால் பத்தர முல்லையில் உள்ள கல்வி அமைச்சில் வைத்து நேற்று வழங்கப் பட்டது. (ஐ)

பாக். முதலீட்டாளர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு, ஏப்.24

இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாகக் கண்டறிவதற்காகப் பாகிஸ்தானிய நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது. அவர்கள் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசினர்.

பாகிஸ்தானின் முன்னணி நிறுவனங்கள் சிலவற்றின் பிரதிநிதிகள் இந்த குழுவில் உள்ளடங்கியுள்ளனர். சுகாதாரம், வீடமைப்பு, சுற்றுலா மற்றும் விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளில் இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ளத் தாம் தயாராக உள்ளனர் என அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

மேலும் அதிவேகப் பாதை நிர்மாணம் மற்றும் பெற்றோலிய வளத் துறையில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாகவும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் உலகின் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன மருத்துவ மனை ஒன்றினை இலங்கையில் நிர்மாணித்தல் தொடர்பாகவும், சுற்றுலா நகரங்கள் இரண்டினையும் குறைந்த செலவிலான புதிய வீடமைப்புப் பகுதிகளை நிர்மாணித்தல் தொடர்பில் முதலீடுகளை மேற்கொள்ளவும் இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் மலிக் சமரவிக்கிர, தேசிய பொருளாதாரச் சபையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் லலித் சமரக்கோன் மற்றும் நிதி அமைச்சினதும் இலங்கை முதலீட்டுசபையினதும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் இதில் பங்குபற்றினர். (ஐ)

'டான்' தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் 7 ஆவது வருடமாக நடைபெறும் 'புதிய விடியல்' வடக்கின் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் நேற்று இரவு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நேற்றைய ஆட்டத்தில் இளவாளை யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் வி.க. அணி மோதியது.

'காலைக்கதிர்' நாளிதழ், ரொப்பாஸ், ரொப்பாஸ் மால் ஆகியவற்றின் அனுசரணை யுடனும், சரவணா அச்சகம், BEES SPORTS ஆகியவற்றின் இணை அனுசரணையுடனும் இந்தச் சுற்றுப் போட்டி நடைபெறுகிறது.

சிங்களக் குடியேற்றம் குறித்து முக்கிய சந்திப்பு வியாழனன்று

முல்லைத்தீவு, ஏப்.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபையினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை வடக்கு மாகாணசபையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக மாகாண சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து அங்கு வடக்கு மாகாண சபையினர் நேரடியாகச் சென்று பார்வையிடுவதெனவும், கூட்டமைப்பு நாடாளுமன்றஉறுப்பினர்களுடன் கலந்து ரையாடுவ தெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய மாகாண அவைத்தலைவர் சி.வீ.கே சிவஞானம் தலைமையிலான மாகாண சபையினர் அண்மையில் முல்லைத்தீவுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு அங்குள்ள மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாகவே நாளை மறுதினம் இடம்பெறவுள்ள சபை அமர்வு முவடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின் சிங்களக் குடியேற்றங்கள், நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் எனக் கூறப்பட்டது. (ஐ-7)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.